
# அறவாழ்வும்
# அருள்வாழ்வும்



செந்தமிழ் அந்தணர்
இரா. இளங்குமரன்

பூவிழி பதிப்பகம்

# அறவாழ்வும் அருள்வாழ்வும்

செந்தமிழ் அந்தணர்
இரா. இளங்குமரனார்

பூவிழி பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **அறவாழ்வும் அருள்வாழ்வும்** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | கு. இந்துமதி |
| முதல் பதிப்பு | 2006 |
| தாள் | 11.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/16 கிரௌன் |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 8 + 104 = 112 |
| படிகள் | 1000 |
| விலை | உரு. **50** |
| நூலாக்கம் | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அச்சு | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| கட்டமைப்பு | இயல்பு |
| வெளியீடு | **பூவிழி பதிப்பகம்,**<br>7/2, செம்பட தெரு<br>சைதாப்பேட்டை மேற்கு,<br>சென்னை - 15. |
| நூல்கள் கிடைக்குமிடம் | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2 சிங்காரவேர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17.<br>தொ.பே: 2433 9030 |

# முன்னுரை

*அறவாழ்வும் அருள் வாழ்வும்* பத்தொன்பது கட்டுரைகளால் நடையிடுகின்றன. முன்னது, பதினொரு கட்டுரை; பின்னது எட்டுக் கட்டுரை.

"ஒருவர் நலவாழ்வினராகவும், நல்வாழ்வின ராகவும் வாழ்வதன் பயன் என்ன?" என வினாவின், அவர் அற வாழ்வினராகவும் அருள் வாழ்வினராகவும் விளங்க அவ்வாழ்வே அடிப்படையாம் என்பத னாலேயே இவ்வாழ்வுகள் எண்ணப்படுகின்றன என்க.

ஒருவர் வாழ்வின் போது அடைய வேண்டிய பெருமை ஒளி என்பது. அவர் மறைவின் பின்னரும் மறையாதிருக்கும் புகழின் மூலம் இவ்வொளியே யாம்.

அதனால் வள்ளுவம் "நின்ற ஒளி" என்றும், புகழல்லாது உலகில் அழியாது நிற்பது ஒன்றும் இல்லை என்றும் கூறும்.

அன்பும் அறனும் இல்வாழ்வின் பண்பும் பயனுமாம். அவ்வில்லற நிறைவில் அருளாட்சி மேற் கொள்ளல் வேண்டும். அவ்வாட்சியே ஒவ்வொருவரும் உலகாகவும் ஆன்ம நேயராகவும் திகழ வாய்ப்பாம். ஆகவே, மாந்தராகப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் அறத் தெளிவும், அருள் தெளிவும் வேண்டும். அத்தெளிவு வாழ்வாகி, மற்றை உயிர்களின் இனிய வாழ்வுக்கு உதவியாகவும் வேண்டும்.

அறமாவது மனத்தில் களங்கம் இல்லாமை. அள்ளிக் கொடுக்கும் கொடையும் களங்கமான மனத்தில் இருந்து, களங்கமான விளைவை நினைத்துத் தரப்படுமானால் அறமாகாதாம்! களங்கமற்ற மனத்தால் ஒரு சொல் கூறினும், ஒரு கவளம் சோறு வழங்கினும் அறமாம்! கொடை அளவு, மனத்தில் களங்கமிலா அளவு சார்ந்தது. ஆதலால், "மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்திறன்" என்றும் "அறத் தான் வருவதே இன்பம்" என்றும் வள்ளுவம் ஆணை யிட்டது.

அருளாவது, உயிர் இரக்கம். 'அகம் தண்மை' யால் - ஆம்! அந்தண்மையால் உண்டாவது அது. எவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் சிறப்பினது. அறவோராவர் அந்தணராகத் திகழ்வது உறுதி என்பதாலேயே, "அந்தணர் என்போர் அறவோர்" என்றார் திருவள்ளுவர்.

அறம், அருள் என்பவை எவருள்ளத்தில் குடை நிழல் செய்கின்றதோ அவர், வாழ்வாங்கு வாழும் தெய்வ நிலையர்! அந்நிலை எய்துதல் பிறவிப்பயனாம். இன்பமே சூழ்க.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# பதிப்புரை

*தமிழர்களின் அகவாழ்வு, புறவாழ்வு, உயர்ந்த உள்ளம், உயரிய வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கி, தொன்மை வாய்ந்த தமிழினத்தின் பண்பு நலன்களை படிப்பார் உளம் கொள்ளத்தக்க வகையில் உரை நடை ஓவியமாக* ***அறவாழ்வும் அருள்வாழ்வும்*** *என்னும்* ***நூலை ஐயா இளங்குமரனார்*** *நமக்கு ஆக்கித் தந்துள் ளார். வள்ளுவத்தை வாழ்வியலாகவும், தமிழியத்தை தம் உயிர் மூச்சாகவும் கொண்டுள்ள இவர்தம் நூல்கள் தமிழரை தலைநிமிரச் செய்வன.*

*திருக்குறள் தொடர்பாக மட்டும் பல நூல்களை தமிழ்கூறும் உலகுக்குச் செய்தவர். பழந்தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகளை மேற்கொண்டவர். புதுத் தமிழ் வளர்ப்பாளி: கலைச்சொல்லாக்கி. இளைய தலைமுறை யர்க்கான தேவைகளை உணர்ந்து அவர்களின் வாழ்வைப் பண்படுத்தத்தக்க நூல்களைத் தம் வாழ்நாள் முழுதும் ஓயாது, ஒழியாது ஆக்கி வருபவர்.*

*“புலவர் இளங்குமரன் ஆழ்ந்த பலதுறைப் புலமையோடு தமிழ்ச் சொற்களின் வேர்களையும் வேறொப்புமைகளையும் கூர்ந்து ஆராயும் நுண்மதி பெற்றவர்” என்று அறிஞர் வ.சு.ப. அவர்களாலும், “பன்னூல் ஆசிரியராகிய இளங்குமரன் தூய தமிழியக் கத்தின் தலைமைத் தொண்டர்; பாவாணரின் முதல் வரிசை மாணவர்; தனித்தமிழ் பரப்பும் வன்தொண்டர்;*

அஞ்சா நெஞ்சினர்; தமிழ் இயக்கத் தூண்; இளைய தலைமுறைக்குச் சிறந்ததொரு வழிகாட்டி" என்று பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களாலும், "இவருடைய தமிழ்நடை சிக்கல் இல்லாதது, தெளிந்த நீரோடை போன்றது. ஆராய்ச்சியில் நடுநிலைமையும், காமஞ் செப்பாது கண்டது மொழியும் நேர்மையும் இவர்க்கு இயல்பாக அமைந்த தனிப் பண்புகளாகும்" என்று பேராசிரியர் மு.வை. அரவிந்தன் அவர்களாலும் பாராட்டப் பெற்றவர்.

தமிழிலக்கியங்களில் காணப்படும் உயர் பண்புகளைத் தனக்கேயுரிய தனிநடையில் கையாண்டு பொது மாந்த நிலையில் நின்று உலகப் பொதுமைகளைத் தம் நூல்களில் பதிவு செய்பவர். பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் உள்ள நம் தமிழ்மொழியின் பெருமைகளை இளையர்க்குக் கொண்டு சேர்க்கும் பணியை இந்நூலாசிரியர் தம் உயிர் பணியாய் கொண்டு வாழ்பவர்.

வாழ்வே தமிழ் மூச்சாக உள்ள இப் பெருந் தமிழறிஞரின் நூல்களை வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம். தமிழ் நலமும், தமிழர் நலமும், தமிழ்நாட்டு நலமும் முதன்மையாகக் கொண்டு எம் பதிப்புப் பணியை தொடர்ந்து தொடங்கி உள்ளோம். எம் தமிழ்ப் பணி தொடர கைகொடுத்து உதவுங்கள்.

**பதிப்பாளர்**

# உள்ளுறை


முன்னுரை iii

பதிப்புரை iv

அறவாழ்வு

1. குழந்தையைக் காப்பது போல் நாட்டைக் காக்க 3
2. நீரைத் தேக்கி நிலை பெறுக 7
3. "செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லை" 11
4. குடிபெருமை காக்க! 15
5. கெடுப்பவர் உரையைக் கேட்காதீர் 19
6. "வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் 23
7. புனைந்துரை புகலேன் 28
8. எல்லோர்க்கும் கொடு! 33
9. உரனுடையவர் உறவு உண்டாகட்டும்! 37
10. "சான்றோர் சான்றோர் பாலர் ஆக" 43
11. மன்னா உலகத்து மன்னுக 49

அருள் வாழ்வு

1. பிறர்க்கென வாழும் பெருந்தகைமை 59
2. கற்றல் நன்றே 62

| | | |
|---|---|---|
| 3. | நாடு போற்றும் நல்லரசு | 68 |
| 4. | வண்டியோட்டும் வகை | 74 |
| 5. | எது நல்ல நிலம்? | 79 |
| 6. | எல்லோரும் உவப்பது | 85 |
| 7. | வெளிப்படக் கூறுக! | 90 |
| 8. | வாழ்வின் வெற்றி | 96 |

அறவாழ்வு

# அறவாழ்வு

# 1. குழந்தையைக் காப்பது போல் நாட்டைக் காக்க

தமிழ்நாடு முற்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பிரிவுகளை உடையதாக இருந்தது. அவற்றுள் சேரநாட்டைப் **பெருஞ்சேரல் இரும்பொறை** என்னும் அரசன் ஆண்டு வந்தான். இரும்பொறை என்பது சேர வேந்தர்களுக்குரிய குடிப்பெயர்களுள் ஒன்றாகும்.

பெருஞ்சேரல் இரும்பொறை புலவர் தோழனாக விளங்கினான். அவன் அறிவுப் பெருமையையும், அன்பு மேம்பாட்டையும், செங்கோல் சிறப்பையும் கேள்விப் பட்டு புலவர் பலர் நெருங்கினர். அவர்களுள் **நரிவெரூஉத்தலையார்** என்பவர் ஒருவர் ஆவர்.

ஒருநாள் பெருஞ்சேரல் இரும்பொறையும் புலவர் நரிவெரூஉத்தலையாரும் உரையாடிக் கொண்டு இருந்தனர். புலவர்க்கு அரசனது உயர்ந்த தன்மைகள் நன்றாகத் தெரியும். ஆயினும் அவனுக்குச் சொல்லு வது மற்றை அரசர்களுக்கும், மக்களுக்கும் பயன்பட வேண்டும் என எண்ணினார். அதனால் தாம் நினைத்ததை ஓர் அழகிய பாடலாகக் கூற விரும்பினார்.

“வேந்தே!” என்று அரசனை அழைத்தார். புலவர் ஏதோ ஒன்றைக் கூற விரும்புகிறார் என்பதை அறிந்த அரசன் “புலவர் பெருமானே, எதையோ கூற வேண்டும் என நினைக்கிறீர்கள்; அதைக் கூறலாமே!” என்றான்.

"அரசே! இந்த நாட்டை நன்றாகப் பேணிக் காக்கின்றாய்; நீ நன்றாக வாழவேண்டும்; மேலும் இந்த நாட்டை நன்றாகப் பேணிக் காக்க வேண்டும். அஃது என் விருப்பம் ஆகும்.

"எந்தத் தொடர்பும் இல்லாதவர்களுக்காகவும், பாடுபடக் கூடிய நல்லவர்களையும் உலகத்தில் காண்கிறோம்; தொடர்பு உடையவர்களிடத்துக் கூட நல்லெண்ணம் இல்லாமல் இருப்பவர்களையும் உலகத்தில் பார்க்கிறோம்.

"சுற்றத்தார், நண்பர், அன்பர் என்பவர் தொடர்புடையவர்கள்; அவர்கள் வளர்த்து வரும் ஆடு, மாடு, நாய், குதிரை, கோழி, புறா ஆகியவை தொடர்புடையவை. இவர்கள் மேலும், இவற்றின் மேலும் செலுத்தும் நல்லெண்ணம் 'அன்பு' எனப்பெறும்.

"எங்கோ இருக்கும் மக்கள் மேலும், கண்டும் கேட்டும் இராத மக்கள், மேலும் ஓரறிவு முதல் ஐயறிவு உடைய எல்லா உயிர்கள், மேலும் ஒரே தன்மையாகச் செலுத்தும் இரக்கம் 'அருள்' எனப் பெறும்.

ஒரு தாய் தன் குழந்தையைக் 'கண்ணே மணியே' என்று சீராட்டிப் பாராட்டி வளர்க்கிறாளே; ஏன்? தன் பிள்ளை என்னும் அன்பினால்! ஒரு புறா தன் வாயில் கொண்டு வந்த தீனியைத் தன் குஞ்சின் வாயைப் பிளந்து ஊட்டுகின்றதே; ஏன்? தன் குஞ்சு என்னும் அன்பினால்!

"பாரி, முல்லைக் கொடி படர்வதற்குத் தன் தேரைத் தந்தான். பாரிக்கும் முல்லைக் கொடிக்கும் இருந்த தொடர்பு என்ன? முல்லைக் கொடி படர் வதற்குப் பந்தல் இல்லாமல் தவிக்கிறது என்னும்

'இரக்கமே' தொடர்பு ஆயிற்று. பேகன் மயிலுக்குப் போர்வை தந்தான். பேகனுக்கும் மயிலுக்கும் இருந்த தொடர்பு என்ன? மயில் வாடையால் நடுங்குகிறது என்னும் 'இரக்கமே' தொடர்பு ஆயிற்று.

"முன்னவை அன்பு; பின்னவை அருள்; இவ் விரண்டு நல்ல தன்மைகளும் மனிதர்க்கு வேண்டும். இத் தன்மை இல்லாதவர்களும் உலகில் உளர். அவர்கள் வாழ்வு நரகவாழ்வே ஆகும். இந்த உலகத்தில் இருக்கும் போதும் அவர்கள் வாழ்வு நரகவாழ்வுதான்; இதைக் கடந்த பின்னும் நரகவாழ்வுதான். அவர்கள் என்றும் நரகத்தில் இருந்து நீங்கப்போவது இல்லை!' தம் உள்ளத்தையே நரகம் ஆக்கிக் கொள்பவர்களுக்கு என்றாவது அதனை விட்டு நீங்கும் நிலை உண் டாகுமா?

"நல்லனவற்றை உணர்ந்த வேந்தே, அன்பு இல்லாத வரையும், அருள் இல்லாதவரையும் நீ சேராதே; அவர்களை உன்னோடு சேரவும் விடாதே. அவ்வாறு இருப்பதே உனக்குப் பெருமை; நாட்டுக்கும் நன்மை.

"இன்னும் ஒன்றைக் கேட்பாயாக; இந்த நாட்டை எவ்வாறு காக்க வேண்டும்? எங்கேயோ - எவரையோ - தேடிப்போய் இதனை அறிந்து கொள்ள வேண்டியது i š i y . **வீட்டுக் காவலைப் பார்! நாட்டுக் காவல் நன்கு விளங்கும்.**

"ஒரு தாய் தன் மக்களை எப்படிக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்றாள்! தன் குழந்தையின் மேல் ஓர் ஈ எறும்பைக் கூட மொய்க்க விடுகிறாளா? குழந்தைக்குச் சிறு துயர்வரினும் எவ்வளவு பெருந் துயர் கொள்கிறாள் தாய்! அது வடிக்கும் கண்ணீரைத் தன் நெஞ்சில் இருந்து வடியும் செந்நீராகக் கருதித்

துடிக்கிறாளே! குழந்தையைச் சுற்றியே தன் வாழ்வை அமைத்துக்கொள்கிறாளே! தாய் தன்னலத்தோடா அன்பு செலுத்துகிறாள்? தன்னையே மறந்தல்லவா அன்பு செலுத்துகிறாள். குழந்தை அன்பிலே தன்னைக் கரைத்துக் கொண்டு நடமாடும் தெய்வம் அல்லவா அவள்!

"தாய் தன் குழந்தையைப் பேணுவதுபோல நீ நின் நாட்டைப் பேணுவாயாக. நீயே தாய்; நின் நாடே நின் சேய்; இந் நிலை மாறாமல் நீ என்றும் வாழவேண்டும். கடமை செய்ய வேண்டும். இதுவே என் விருப்பம் ஆகும்" என்று கூறினார். இக் கருத்துகளை மற்றவர் களும் அறிந்துகொள்ளுமாறு மூன்றே அடிகளில் ஒரு பாட்டினிடையே உரைத்தார்:

***"அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயம் கொள்பவரொடு ஒன்றாது காவல்***
***குழவி கொள்பவரின் ஓம்புமதி"***

என்பது நரிவெரூஉத் தலையார் வாக்கு.

இரும்பொறை, புலவர் அறிவுரை பொய்ப்படா, வண்ணம், ஒருதாய் தன் குழந்தையைக் காப்பது போல நாட்டைக் காத்தான். அவனுக்கும் நல்ல பெயர் உண்டாயிற்று; நாட்டுக்கும் நன்மை ஆயிற்று.

புலவர் நரிவெரூஉத்தலையார் நமக்கு என்ன சொல்கிறார்?

***"அன்போடு இரு"***

***"அருளோடு இரு"***

***"நாட்டுக்கு நற்பணி செய்"***

என்பவை நரிவெரூஉத் தலையார் நமக்குச் சொல்பவை ஆகும்.

## 2. நீரைத் தேக்கி நிலை பெறுக

இளைஞனாக இருக்கும்போதே பெரு வீரனாக விளங்கியவன் **பாண்டியன் நெடுஞ்செழியன்**. ஏழு அரசர்கள் ஒன்று கூடி வந்து, " இவனை அழித்து விடலாம்" எனத் தாக்கினர். ஆனால், அவனோ அந்த ஏழு அரசர்களையும் ஓட ஓடத் தாக்கினான். அவர்கள் முடிகளைப் பறித்து, அவற்றில் இருந்த மணிகளைப் பொறுக்கி எடுத்து, ஒரு முடி செய்து சூடிக் கொண்டான்.

பாண்டியன் வீரனாக விளங்கியதுடன், சிறந்த புலவனாகவும் விளங்கினான். அவன் தன் பகைவர் களை நோக்கிப் பாடிய ஒரு பாட்டு புறநானூறு என்னும் நூலில் உள்ளது.

பாண்டியனை நெருங்கி இருந்த புலவர்கள் பலர். அவர்களுள் குடபுலவியனார் என்பவர் ஒருவர். அவர் பாண்டியனிடம் ஒரு நாள் அளவளாவிக் கொண்டு இருந்தார். அப்பொழுது அவர்கள் உரையாடல் " உலகியல்" குறித்துச் சென்றது.

"மனிதர் வாழ்வு நிலையற்றது" என்று பலரும் சொல்கின்றனர். அவ்வாறு நிலையில்லாததுதானா மனித வாழ்வு? எத்தனையோ பேர்கள் இன்று இல்லாமல் இருந்தும், அவர்கள் பெயர் அழியாமல் விளங்குகின்றதே! அவ்வாறாக இருந்தும், "நிலையற்ற வாழ்வு" என்பது பொருந்தாதே! எனத் தம் உரையை

நிறுத்தினார் புலவர். மேலும் அவர் கூறுவதைக் கேட்க ஆவலோடு இருந்தான் அரசன்.

"அரசே! உடல் இருவகைப்படும். ஒன்று பொய் யுடல், அஃது அழிவது; மற்றொன்று மெய்யுடல்; அஃது அழியாதது. **அழியும் உடலைக் கொண்டுதான் அழியா உடலைப் பெறுதல் வேண்டும்;** அப்படிப் பெற்றவர்களே அழியா வாழ்வினர்" என்றார் புலவர்.

அழியா வாழ்வு பெறுவதற்கு ஆவல் எவருக்கு இருக்காது? ஆதலால் அரசன் ஆர்வத்துடன் செவி கொடுத்துக் கேட்டான்.

"உலகத்தைக் காப்பவர்கள் உழவர்களே ஆவர். அவர்கள் ஆக்கித் தரும் உணவுகளால் தாம் உயிர்கள் வாழ்கின்றன. அதனால் உணவு கொடுப்பவர்களே உயிர்களையும் கொடுப்பவர்கள். அவ்வுழவர்க்கு உதவி செய்து வாழ்பவர்க்கு அழிவே இல்லை.

"உழவர்களுக்கு எவ்வகையில் உதவி செய்யலாம் என நீ நினைக்கலாம். கூறுகிறேன் கேள்: உழவுத் தொழில் நன்றாக நடந்தால் தானே உயிர்களுக்கு உணவு தர முடியும்! விதையை நிலத்தில் போட்டுவிட்டு வானத்தைப் பார்த்துக் கொண்டு உழவன் இருந்தால் உழவுத் தொழில் சிறப்பாக நடக்குமா? உயிர்கள் வாழுமா?

"ஒரு நாட்டில் எவ்வளவு விரிவான நிலம் இருந்தும் பயன் இல்லை; நீர் வளம் வேண்டும்; நீர் வளம் இல்லாமல் நிலவளமோ உழைப்போ பயன்படா! அவை பயன்பட வேண்டுமானால், நிலத்தில் விதை போட்டுவிட்டு வானத்தைப் பார்த்து நிற்கும் நிலைமை மாற வேண்டும். ஆட்சி செய்பவர்கள் மாற்றி அமைக்க வேண்டும்.

"எப்படி மாற்றி அமைக்கலாம்? என்று எண்ணுகின்றாய். நல்லதே நினைத்தாய். அதற்கு வழி உண்டு; இயற்கையைப் பயன்படுத்திக்கொண்டு நிலைமையை மாற்ற வேண்டும். நீர்வளம் பெருகச் செய்யும் ஒன்றே அதற்குரிய வழியாகும்.

"வேந்தே! மழை, குறித்த காலத்தில் பெய்கின்றது. பின்னர் நெடுங்காலம் பெய்யாமல் ஒழிகின்றது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது போல மழை பெய்யும் போதே அதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் கூறுகிறேன்; கேட்பாயாக!

"இயற்கை சில இடங்களைக் கிடங்காக வைத்துள்ளது. சில இடங்களை மேடாக வைத்துள்ளது. மேட்டில் விழுந்த மழைநீர் கிடங்கிற்கு ஓடிச் சேரும். அக்கிடங்கை அகலமாக்கி ஆழமும் ஆக்கிக் கரையும் அமைந்து விட்டால் - ஏரி, குளம் என்று ஆக்கி விட்டால் - அதில் தேங்கிய நீர் நெடுநாட்களுக்குப் பயன்படுமே! ஒருநாள் பொழிந்த மழை நீரை ஒரு விளைவுக்கு ஏன் இரு விளைவுக்குக் கூடத் தேக்கி வைத்துக் கொள்ளலாமே! இவ் வாய்ப்பு இயற்கையாக இருந்தும் பயன்படுத்திக் கொள்ளத் தவறக் கூடாதே.

"நீரைத் தேக்கி வைத்தல் என்பது எளிய பயன் தருவதன்று. ஓட்டத்தில் ஓடி நீர்வீணே கடலில், **கலக்காமல் விளைவுக்குப் பயன்படுமாறு தடுத்து நிறுத்தியவர் எவரோ அவரே, அறத்தையும், பொருளையும், இன்பத்தையும் போகாமல் தடுத்து நிறுத்திக் கொண்டவர் ஆவர். அவரே தம் பெயரையும் அழிந்து போகாமல் நிலை நிறுத்திக் கொண்ட**

**வரும் ஆவர்.** அவ்வாறு நீரைத் தடுத்து நிறுத்திக் கொள்ளாதவர் அறத்தையும், பொருளையும், இன்பத்தையும் நிறுத்தி வைத்துக் கொள்ளாதவரே ஆவர். புகழையும் நிறுத்திக் கொள்ளாதவரே ஆவர்" என்றார்.

புலவர் குடபுலவியனார் உரையைக் கேட்ட பாண்டியன் பூரிப்படைந்தான். அவர் தம் அறிவுரையை அப்படியே கடைப் பிடிக்க முனைந்தான். ஏரியும், குளமும், அணையும் அமைத்தான். நீரைத் தேக்கி விளைவைப் பெருக்கினான். மக்கள் வாழ்வில் மாறா மகிழ்ச்சியையும் பெருக்கினான். உலகம் என்றும் அவனை நினைத்துப் பாராட்டும் பெருமை உண்டா யிற்று!

குடபுலவியனார் உரை இப்பொழுதும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்லவா? இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனால் என்ன! இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆனால் தான் என்ன! நீரைத் தேக்கி வைக்காமல் நிலம் செழிக்காதே!

> ***"நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்***
> ***தட்டோர் அம்ம! இவண்தட் டோரே;***
> ***தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"***

என்பது குடபுலவியனார் வாக்கு.

(தட்டோர் - தடுத்தோர்; தள்ளாதோர் - தடுக்கா தோர்; நிலம் பள்ளமாக உள்ள இடத்தில் நீர்நிலை களை ஆக்கித் தடுத்துக் கொண்டவரே அறமும், பொருளும், இன்பமும், புகழும் தடுத்துக் கொண்டவர்; அவ்வாறு தடுக்காதவர் இவ்வுலகில் அறமும் பொரு ளும் இன்பமும் புகழும் தடுத்துக் கொள்ளாதவரே ஆவர்.)

## 3. "செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லை"

*ஆலத்தூர் என்பதோர் ஊர். அவ்வூரில் ஓர் உழவர் இருந்தார். அவர் நாளும் கற்று நல்ல அறிஞராக விளங்கினார். அவரை ஆலத்தூர் கிழார் என்று அனைவரும் போற்றி அழைத்தனர்.*

*ஆலத்தூர் கிழார் சங்கச் சான்றோர்களுள் ஒருவர். அவர் கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் காலத்தில் வாழ்ந்தவர். அவன் அன்புக்கும் பெரிதும் உரியவராக இருந்தார். அவனுடன் பலகாலம் இருந்து உறவாடி இன்புற்றார். பின்னர் ஒருநாள் தம்முடைய ஆலத்தூர்க்குப் போய்வர விரும்பினார். அவர் விருப்பத்தை அறிந்த அரசன் பரிசுகள் பல வழங்கி அனுப்பி வைத்தான்.*

*ஆலத்தூர் கிழாரை அனுப்பும்போது,* ***"புலவரே! உமக்கு எம் நினைவும் வருமோ? எம்மைப் பார்க்க மீண்டும் இங்கு வருவீரோ?"*** *என்று வினாவினான் அரசன். இவ் வினாக்கள் ஆலத்தூர் கிழார் நெஞ்சத்தை வேல்போலத் துளைத்தன.*

*எவ்வளவு அன்பாகப் பழகிய வேந்தன்! உடன் உண்டு, உடன் மகிழ்ந்து இருந்தவன்! என்னென்ன உதவிகளையெல்லாம் செய்தவன்! எதிர்பார்க்காமலே எவ்வளவு பொன்னும் பொருளும் வழங்கினவன்! தான் அரசன் என்னும் எண்ணம் இல்லாமல் எவ்வளவு அன்பால் அரவணைத்துக் கொண்டவன்! இவனை*

நான் மறப்பேனா! மறந்து, இவனைப் பார்க்க வாராது இருப்பேனா! அவ்வளவு நன்றி மறந்தவனா நான்!" என்று பலவாறு எண்ணினார்; வருந்தினார். தம் மன நிலையை எல்லாம் சேர்த்து, ஒரு பாடலாக்கி, அவ் வேந்தனுக்குப் படைத்தார்! அரசன் புலவர்க்கு எவ்வெவற்றையெல்லாம் உவப்போடு படைத்திருக் கிறான்! அவனுக்குப் புலவர் பாடலைப் படைப்பது முறைதானே!

"வேந்தே! பாட்டுப் பாடுபவரையும் யாழ் மீட்டு பவரையும் சுற்றமாகக் கொண்டவனே, தேடி வந்தவர்க் கெல்லாம் வாரி வழங்குபவனே,

**'எங்கோன் வளவன் வாழ்க'**

என்று நான் என்றென்றும் பாடாமல் இருப்பேனோ?

"இந்த உலகத்தில் வாழும் நன்மக்கள் செய்த நல்வினை ஒன்று உண்டானால் நீ நெடுங்காலம் வாழவேண்டும். வெள்ளிப் பனிமலையின் மேல், கருமுகில் கூட்டமெல்லாம் திரண்டு பொழியும் மழைத் துளிகளின் எண்ணிக்கையிலும் நீ நெடுங்காலம் வாழவேண்டும்.

"அண்ணலே, கன்றுக்கு எனச் சுரக்கும் பாலைக் கைக்குழந்தைக்கு எனத் தரும் பசுவின் மடுவினை அறுத்த பாவிகளுக்கும் அப் பாவம் போக்கும் வழியுண்டு!

"உருக்கொண்டு திரண்டுவரும் கருவினைச் சிதைத்து அழித்து விட்டவர்க்கும் அவ்வழிவுக் கேட்டைப் போக்கும் வழியுண்டு!

"பெறுதற்கு அரிய பெரியவர்களுக்குப் பெருங் கேடு செய்தவர்களுக்கும் அக் கெடுதியைப் போக்கும்

வழியுண்டு! ஆனால், ஒரே ஒரு குற்றம் செய்தவர்க்கு மட்டும் அக் குற்றத்தில் இருந்து தப்பும் வழியே இல்லை!" என்றார்.

'அக் குற்றம் யாது?' என அரசன் திகைப்படைந் தான். அவனுக்கு என்னவென்றே புரியவில்லை. புலவர் தம் உரையைத் தொடர்ந்தார்:

"பசுவைக் கொல்லுதல், கருவினைச் சிதைத்தல், பெரியோரைக் கொல்லுதல் ஆகிய கொலைக் கொடுமை களிலும் கொடுமையானது ஒருவர் செய்த நன்றியைக் கொல்லுவதேயாம். நன்றியைக் கொன்றவர்க்கு நல்வழி இல்லவே இல்லை!" என்று நிறுத்தினார் புலவர்.

புலவர் ஏன் இப்பொழுது இதனைக் கூறினார் என நினைத்தான் அரசன் கிள்ளி வளவன். "புலவரே! உமக்கு என் நினைவும் வருமோ? எம்மைப் பார்க்க மீண்டும் இங்கு வருவீரோ" என்று நான் அவரை வினாவிய வினா தைத்தமையால் தான் இதனைக் கூறினார் என முடிவு செய்தான். "நான் வினாவியது அவர்க்குத் துன்பந் தந்தாலும், துன்பத்தின் வழியான இன்பந் தந்தாலும் எனக்கு இன்பமே தந்தது. நான் இவ் வினாவை எழுப்பி இருக்காவிட்டால் எனக்குப் புலவர் வாழ்த்துக் கிடைத்திருக்குமா? புதுப்பாட்டு ஒன்று கிடைத்திருக்குமா?" என மகிழ்ந்தான்.

அரசன் மகிழ்ச்சியை முகத்தில் அறிந்த புலவர் "மண்ணே கீழ் மேலாக மாறிவிட்டாலும் சரி; ஒருவன் செய்த உதவியை மறந்தவனுக்கு அப் பாவத்தில் இருந்து தப்புவதற்கு வழியே இல்லை! ஆதலால் நீ செய்த நன்றியை மறவேன்! இங்கு வாராமல் இரேன்" என்றார். அரசன் புலவரின் உயர்ந்த நெஞ்சத்தை உணர்ந்து உவகையோடு விடைதந்து அனுப்பினான்.

புலவர் **ஆலத்தூர் கிழார்** கிள்ளி வளவன் வழியாக நமக்குச் சொல்வது என்ன?

*"நன்றி மறவாதே"*

என்பதே.

*"நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்*
*செய்தி கொன்றார்க்(கு) உய்தி இல்லை"*

(நிலம் தலை கீழாக மாறினாலும ஒருவன் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்யும் வழியே இல்லை.)

## 4. குடிப்பெருமை காக்க!

ஒரு காலத்தில் சோழ நாட்டை நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் அரசர் இருவர் ஆண்டு வந்தனர். அவர்கள் இருவரும் பங்காளிகள். ஆனாலும், இருவரும் பகைவராக இருந்தனர்.

பகை சிறிது சிறிதாக வலுத்தது; போராக வளர்ந்தது; நெடுங்கிள்ளி உறையூரில் இருந்தான். உறையூரில் பெரிய கோட்டை இருந்தது. அக் கோட்டையை வளைத்துக் கொண்டான் நலங்கிள்ளி. கோட்டைக்குள்ளே அடங்கிக் கிடந்தான் நெடுங் கிள்ளி.

கோட்டையை முற்றுகையிட்டால் என்ன நடக்கும்? கோட்டைக்குள் எவரும் போக முடியாது; எப்பொருளும் போக முடியாது. வெளியேறி வரவும் எவருக்கும் முடியாது; எந்தப் பொருளையும் வெளி யேற்றவும் முடியாது. மக்களுக்கும் விலங்குகளுக்கும் சொல்ல முடியாத துயர் உண்டாகும். தண்ணீர்க்கும் உணவுக்கும் தட்டுப்பாடு நேர்ந்து விடும். என்ன செய்ய முடியும்! 'இருதலைக் கொள்ளி எறும்பு போல' என்பார்களே! அந் நிலைமைக்கு அனைவரும் ஆளாவர்.

எவருக்கு என்ன வந்தால் எங்களுக்கு என்ன? என்று சான்றோர்கள் நினைப்பது இல்லை. எவர் துயருற்றாலும் அத்துயரத்தை ஒழிப்பதற்குப் பாடுபடு

வது அவர்கள் பண்பு. ஆதலால் உறையூர் முற்றுகையை அறிந்த கோவூர்கிழார் என்னும் பெரும்புலவர் வருந்தினார். உறையூர்க் கோட்டைக்குச் சென்றார். மதிலை முற்றி இருக்கும் நலங்கிள்ளியையும், மதிலுக் குள் இருக்கும் நெடுங்கிள்ளியையும் அமைதிப் படுத்த முனைந்தார்.

மதிலை முற்றுகை இட்டிருந்த நலங்கிள்ளியை நோக்கினார்; மதிலின் உள்ளே இருந்து தாக்க நின்ற நெடுங்கிள்ளியையும் நோக்கினார். தம் கருத்தைக் கூறினார்.

"வேந்தர்களே! கேளுங்கள்; நீங்கள் ஒருவரை ஒருவர் தாக்குவதற்கு நிற்கிறீர்கள்; நீங்கள் இருவீரும் ஒரே சோழர் குடியைச் சேர்ந்தவர்கள்; பங்காளிகள்; ஆயினும் பகைவராக நிற்கிறீர்கள்!

"வேந்தே! உன் தலையில் உள்ள பூ என்ன? உன்னை எதிர்ப்பவன் தலையில் உள்ள பூ என்ன? பனம் பூ மாலை எவரும் சூடவில்லை; வேப்பம் பூ மாலையும் எவரும் சூடவில்லை; அவ்வாறு சூடினால் சேரன் என்றோ, பாண்டியன் என்றோ கூறலாம். நீயும் ஆத்தி மாலை சூடியுள்ளாய். அவனும் ஆத்தி மாலை சூடியுள்ளான். ஆதலால் நீங்கள் இருவரும் சோழர் குடியினர் என்பதைச் சொல்ல வேண்டியது இல்லை.

"வேந்தர்களே, நீங்கள் இருவீரும் இப்பொழுது போரிடுகிறீர்கள். இருவரும் வெற்றி பெறுவீர்களா? எத்தகைய சிறந்தவர் ஆயினும் இருவருள் ஒருவர் தாமே வெற்றி பெற முடியும். ஒருவர் தோற்கத்தானே வேண்டும்? எப்படியும் 'சோழன் தோற்றான்' என்பதை அன்றி, வெற்றி பெற்றான் என்னும் பெருமை உண்டாகுமா?

"இன்னுங் கேளுங்கள். உங்கள் குடிக்கு வெற்றி தராமல் போயினும் போகட்டும். உங்கள் இருவர் செயலும் உங்கள் குடிக்குப் பழி உண்டாக்கும் செயலாக அல்லவா உள்ளது? இதற்கு முன்னே உங்களுக்குப் பகைவராக இருந்த அரசர்களுக்கு எல்லாம் மிக மகிழ்ச்சி தரும் செய்தியாகி விடும், நீங்கள் இருவரும் செய்யும் போர் உங்கள் குடியைப் பழித்துக் கூறவும் இடமாகி விடும். குடிப்பழி உண்டாக்கும் செயலை நீங்கள் செய்யலாமா? நீங்கள் ஒன்று படுவதுதான் உங்களுக்கு நல்லது; உங்கள் குடிக்கும் பெருமை; நாட்டுக்கும் நன்மை; ஆதலால் ஒன்று படுவீர்களாக! பகை நீங்குவீர்களாக! போர் ஒழிவீர்களாக! என்றார்.

'**என் பெருமையைக் காப்பது சிறப்பா? என் குடிப் பெருமைக் காப்பது சிறப்பா?**" என்று இருவரும் எண்ணினர்; பகை நீங்கி ஒன்றுபட்டனர். புலவர் மகிழ்ந்தார்! மக்கள் இன்புற்றனர்.

புலவர் கோவூரார் கூறிய உரை பொன் போன்றது; இக் காலத்திலும் இன்றியமையாதது. நம் குடும்பத்துக்குள்ளே எத்தனை சண்டைகள்! உடன் பிறந்தவர்களுக்குள்ளே எத்தனை தகராறுகள்! தமிழர்களுக்குள்ளே எத்தனை பிளவுகள்; பிணக்குகள்! இவை நீங்க வேண்டாவா?

*"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"*

என்று நமக்கு வலியுறுத்திய கோவூர்கிழார் வாழ்வாராக,

*"ஒருவீர் தோற்பினும் தோற்பதுஉம் குடியே;*
*இருவீர் வேறல் இயற்கையும் அன்றே;*
*குடிப்பொருள் அன்று நும்செய்தி"*

என்பது அவர் வாக்கு.

(ஒருவர் தோற்றாலும் தோற்றது சோழர்குடியே; போரில் இருவரும் வெற்றி கொள்வது இயலாது; ஆதலால் குடிக்கு நன்மை தருவது அன்று உங்கள் செயல்.)

# 5. கெடுப்பவர் உரையைக் கேட்காதீர்

ஒரு குடியில் பிறந்தவர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்தால் போதும் என்பது சான்றோர் கொள்கை அன்று. உலகமெல்லாம் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதே அவர்கள் உள்ளார்ந்த ஆவலாகும். அவர்கள் வடக்கு தெற்கு என்றோ, வெள்ளை கருப்பு என்றோ, மேல் கீழ் என்றோ எந்த வகையாலும் வேறுபடுத்திப் பார்ப்பது இல்லை. "எல்லாரும் எம் உறவினர்" என்பதே அவர்கள் கொள்கை ஆகும். கடல்போல விரிந்த அவர்கள் உள்ளத்தில் வேற்றுமைக்கே இடம் இல்லை! கடலுக்குள் வீழ்ந்த பின்னர் 'இது கங்கை யாறு' இது 'காவிரியாறு' என்று வேறுபாடு உண்டா?

கடலுக்குள் அழிந்து போன பெருநகரம் காவிரிப் பூம்பட்டினம். அவ்வூரில் **காரிக்கண்ணனார்** என்றொரு புலவர் இருந்தார். அவர் ஊர்ப் பெயரையும் சேர்த்துக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்று அழைத்தனர். சங்கச் சான்றோர்களுள் காரிக்கண்ண னாரும் ஒருவர் ஆவர்.

எறும்புகள் வரிசை வரிசையாகப் போகப் பார்க்க லாம்; காகம் கூடிச் சேர்ந்து கரைந்து உண்ணுதலைக் காணலாம்; சிறகி என்னும் பறவை வண்ணமாலை போல வானத்தில் அழகுறப் பறந்து போகப் பார்க்க லாம்; ஆனால், இரண்டு அரிமாக்கள் (சிங்கங்கள்) ஒன்றுபட்டிருக்கக் காணமுடியாது! அப்படி ஒரு

வேளை ஒன்று பட்டிருக்கக் கண்டால் கூட **இரண்டு வேந்தர்கள் ஒன்றுபட்டு ஓரிடத்தில் இருக்கக் காண்பது அருமையாகும்.** அத்தகைய அருமையான காட்சி ஒன்றைக் காரிக்கண்ணனார் கண்டார்.

இரண்டு வேந்தர்கள் ஓரிடத்தில் அன்போடு அளவளாவி இருக்கக் கண்டார். ஒருவன் சோழ வேந்தன்; மற்றொருவன் பாண்டி வேந்தன். முன்னவன் **பெருந்திருமா வளவன்;** பின்னவன் பெருவழுதி. அவர்களைப் பாராட்ட வேண்டும் என்பதுபோலப் புலவர்க்குத் தோன்றியது. அவர்கள் இவ்வாறே எந்நாளும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் என்னும் ஆவலும் தோன்றியது. அதனால் தம் கருத்தை அவர்களுக்கு உரைத்தார்.

“வேந்தே! நீ சோழ நாட்டின் தலைவன்; அவனோ பாண்டிய நாட்டின் வேந்தன்.

“நீ அறமிக்க உறையூரின் மன்னன்; அவனோ தமிழ் மதுரைக்குத் தலைவன்.

“நீங்கள் ஒன்றுபட்டு இருக்கும் இவ்விருப்பு எல்லையற்ற இன்பம் தருவதாம்.

“பால் போலும் நிறத்தையுடைய பலதேவனும், கருமணி போலும் நிறத்தையுடைய கண்ணனும் ஆகிய இரண்டு பெரிய தெய்வங்களும் ஒன்றாக இருப்பது போல உள்ளீர்கள். இதைப் பார்க்கிலும் இன்பம் தருவது எனக்கு ஒன்றும் இல்லை.

“இன்னும் நான் கூறுவதைக் கேட்பீர்களாக! உங்கள் புகழ் பெரிதும் பரவுவதாக! உங்களுள் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து வாழ்வீர்களாக!

நீங்கள் ஒன்றுபட்டு இருந்தால் இந்த உலகம் முழுதும் அடைய வேண்டும் என்றாலும் அடைதல் கூடும்!

"வேந்தர்களே, உங்கள் ஒற்றுமையை விரும்பாதவர்களும் இருக்கலாம். அவர்கள் நல்லவர்களைப் போலவும், அன்பர்களைப் போலவும், பழைமையான தொடர்புடையவர்களைப் போலவும் அணுகி, உங்களைப் பிரிப்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபடலாம். அத்தகையவர்களுடைய சொல்லுக்குச் செவிகொடாது நீங்கள் வாழுதல் வேண்டும். இன்று போலவே என்றும் ஒற்றுமையாக வாழுதல் வேண்டும். இஃது என் விருப்பம் மட்டும் அன்று. நல்லோர் அனைவர் விருப்பமும் ஆகும்" என்றார்.

பிரிப்பதற்குக் கருதாமல் பிணைப்பதற்காகவே வாழும் பெருமகனார் காரிக்கண்ணனார் உரை, வேந்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்தது. புலவர் உரையை ஏற்றுப் பாராட்டினர்; நன்றியும் தெரிவித்தனர்.

பல்வேறு மொழிகளும், பல்வேறு இனங்களும், பல்வேறு பழக்க வழக்கங்களும் உடைய இந் நாட்டுக்குக் காரிக்கண்ணனார் உரை இக் காலத்துக்கும் ஏற்றது அல்லவா! அதனால், அவருரையை நாமும் போற்றுவது கடமை அல்லவா!

***"ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது***
***இன்றே போல்க நும்புணர்ச்சி."***

நல்லெண்ணம் இல்லாதவர்களின் தகுதியற்ற மொழியை ஏற்றுக் கொள்ளாமல் இன்று போல என்றும் ஒன்றுபட்டு வாழ்வீர்களாக என்பது காரிக்கண்ணனார் வாக்கு.

*கேட்கத் தக்கவர் சொல்லைத்தானே கேட்க வேண்டும்! கெடுக்கக் கூடியவர் சொல்லைக் காது கொடுத்துக் கேட்கலாமா? அதிலும் ஆட்சி செய்வோர் கேட்கலாமா?*

## 6. "வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்"

தமிழகத்தின் தென் கோடி 'நாஞ்சில் நாடு' எனப் பெறும். நாஞ்சில் என்பது ஒரு மலையின் பெயர். அம் மலையைச் சார்ந்த பகுதி நாஞ்சில் நாடு என அழைக்கப் பெற்றது. அந் நாஞ்சில் நாட்டில் பழங்காலத்தில் ஒரு வள்ளல் இருந்தான். அவன் **நாஞ்சில் வள்ளுவன்** என்று சான்றோர்களால் அழைக்கப் பெற்றான்.

நாஞ்சில் வள்ளுவன் பெருவீரன்; சேர வேந்தர் களுக்குப் படைத் தலைவனாக இருந்தான்; சிறந்த கொடையாளி; **ஔவையார்** ஒருமுறை அவனைப் போய்ப் பார்த்து. "கீரைக் கறியுடன் சேர்த்துக் கூட்டுவதற்காகக் கொஞ்சம் பருப்பு வேண்டும் என்று கேட்டார். நாஞ்சில் வள்ளுவனோ பருப்புத் தருவ தற்குப் பதிலாகப் பருத்த யானையையே பரிசாக வழங்கினான். இதனால் அவன் கொடைச் சிறப்பு விளங்கும்.

நாஞ்சில் வள்ளுவன் பாராட்டத் தக்க பல நல்ல பண்புகளைக் கொண்டிருந்தான். அதனால் அவனைப் பெற்றவர்களுக்கும் பெருமை உண்டாயிற்று. இவனைப் போல் பிள்ளைகளும், இவனைப் பெற்றோர்களைப் போல் பெற்றவர்களும் இருக்க வேண்டும் என்று புலவர்கள் புகழும் பெருமை உண்டாயிற்று. ஒரு சமயம் நாஞ்சில் வள்ளுவனைப் பார்த்த ஒரு புலவர்,

“நீ வாழ்வாயாக! உன்னை பெற்ற பெருமைக்குரிய நின் பெற்றோர்களும் வாழ்வார்களாக!” என்று வாழ்த்தினார். மக்கள் தம் பெற்றோர்க்குச் செய்யும் பெருமை இதுதானே!

நாஞ்சில் வள்ளுவனைப் பார்க்க மதுரையில் இருந்து ஒரு புலவர் வந்தார். அவர் **மருதன் இள நாகனார்** என்பவர் அவரோடு ஆடுபவர்களும், பாடுபவர்களும் ஆகிய கலைஞர்கள் பலரும் வந்தனர். நாஞ்சில் வள்ளுவனைக் கண்டு இன்புற்றனர். அப் பொழுது மருதன் இளநாகனார் தாம் கடைப்பிடித்து வரும் ஒரு நன்மொழியை எடுத்துரைத்தார். மருதனிள நாகனாரின் மாண்பைக் காட்டும் மொழி அதுவாகும்.

“வேந்தே! நான் ஒரு கூட்டத்துடன் வந்துள்ளேன்; நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக ஏதாவது புனைந்து பொய்யுரை கூற மாட்டேன்; மெய்யுரையே கூறுவேன்” என்றார்.

> ***“வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்***
> ***மெய் கூறுவல்”***

என்பது அவர் வாக்கு.

நம் நல்வாழ்வுக்கு இந்த ஒரு நன்மொழி போதுமே! பொய்தானே எல்லாத் தவறுகளுக்கும் அடிப்படை. அப்பொய்யை ஒழிக்காதவர் வேறு எத்தகைய சிறந்த தன்மைகளையுடையவராக இருந்தாலும் சிறந்தவர் ஆக மாட்டாரே!

பொய்யை மலச்சிக்கலுக்கு ஒப்பாகக் கூறுவர். மலச்சிக்கலே எல்லா நோய்களுக்கும் அடிப்படை. அது போல் பொய்யே எல்லாக் குற்றங்களுக்கும்

அடிப்படை என்பது அவர்கள் தெளிவு. அதனால்தான் திருவள்ளுவர்,

> *"பொய் கூறாத ஒருவன் வேறெந்த*
> *அறத்தைச் செய்யாவிட்டாலும் குறைவில்லை"*

என்று கூறினார். இதனால், 'பொய் கூறாமையே சிறந்த அறம்' என்பது திருவள்ளுவர் கருத்தெனத் தெளியலாம்.

பொய் கூறாமையைக் குழந்தைப் பருவத்திலேயே கொள்ள வேண்டும். குழந்தைகளுக்குப் பொய் கூறத் தெரியாது. மற்றவர்களைப் பார்த்தே படித்துக் கொள்கிறது. உள்ளதை உள்ளபடியே சொல்லும் குழந்தை உண்மையை மறைத்துப் பேசும் பெரியவர்களைப் பார்க்கிறது. அவர்களிடம் இருந்து பொய்யைப் படித்துக் கொள்கிறது! இதனை ஒழிக்க வழி உண்டு. உண்மைக்கு மதிப்புத் தர வேண்டும். உண்மை உரைப்பவர்க்குப் பாராட்டுக் கிடைக்க வேண்டும். உண்மை உரைத்தால் தண்டனை கிடைக்கும் என்னும் நிலைமை இருந்தால் அத் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பொய் சொல்ல நேரிடும். பிறகு அதுவே பழக்கமாகி விடும்.

வீட்டுக்குள் இருந்துகொண்டே, "அப்பா இல்லை என்று சொல்லு" என்று குழந்தைக்கு உரைத்தால் அக் குழந்தைக்குப் பொய்யைக் கற்பிக்கும் ஆசிரியர் அப்பா தாமே! அப்பா - அம்மா - தாமே குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர்கள்!

ஒரு சிறுமி ஒட்டடை அடிக்கிறாள். நெடுங் கம்பைத் தாங்கி அடிக்கும் வலிமை அவளுக்கு இல்லை. ஒட்டடை அடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தால்

அடிக்கிறாள். ஒட்டடைக் கம்பு ஆங்குச் சுவரில் இருந்த கண்ணாடியில் பட்டுவிடுகின்றது. கண்ணாடி உடைந்து துண்டு துண்டாகிப் போகின்றது. உண்மையை மறைக்கச் சிறுமிக்கு மனம் இல்லை. வெளியே போய் இருந்த தந்தை வாயிலுக்கு வந்தவுடன் கண்ணாடி உடைந்ததை உரைக்கிறாள். தந்தை, 'ஏன் உடைத்தாய்?" என்று சிறுமியின் கன்னத்தை உடைத்தால், அதற்குப் பின்னரும் ஏதாவது உண்மையைச் சொல்வாளா? பொய் கூறத்தானே துணிவாள்! அந்தப் பொய்யை எப்படிப் படித்துக் கொண்டாள்? அவளுக்கு வழிகாட்டியவர் யார்?

ஆனால், அத் தந்தையார், **"கண்ணாடி உடைந்து விட்டதா? உடைந்த துண்டு காலிலோ கையிலோ பட்டு விடவில்லையே! கண்ணாடி உடைந்தது என்று கவலைப்பட வேண்டா! கண்ணாடி எளிய மதிப்புடைய ஒரு பொருள். ஆனால், நீ கூறிய உண்மை விலை மதிப்பற்ற பொருள். பொன்னினும், மணியினும் முத்தினும் வயிரத்திலும் உயர்ந்த பொருள்!"** என்று பாராட்டினால் சிறுமி தன் வாழ்வில் மறந்தும் பொய் கூறுவாளா?

மருதன் இளநாகனார் உண்மை போற்றி வாழ்ந்தவர்; அவர் தம் உண்மையை அவர் பெற்றோர் போற்றி வளர்த்தவர்கள். அதனால்,

> *"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்*
> *மெய் கூறுவல்"*

என்று குறிக்கோள் வகுத்துக் கொண்டு வாழ்ந்தார்.

எவ்வளவு பொருளற்ற செயல்களுக்கெல்லாம் மக்கள் பொய் கூறுகின்றனர்! விளையாட்டாக எத்தனை

எத்தனை பொய்களைக் கூறுகின்றனர்! பொய் கூறி ஏமாற்றுவதில் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றனர்! பொய் கூறுவதை நெய்ச்சோறு உண்பது போல எத்தனை பேர் சுவைக்கின்றனர்! ஆனால், மருதன் இளநாகனார் என்ன கூறுகின்றார்?

"நான் ஒரு பொய் கூறினால் ஆயிரம் ஆயிரமாகத் தேடலாம் என்னும் நிலைமை உண்டாயினும், கோடி கோடி செல்வம் குவியும் என்றாலும், ஒரே ஒரு பொய்யால் என் உயிரைப் போகாமல் காத்துக் கொள்ள முடியும். இன்னும் இக்கட்டு ஏற்பட்டாலும், பொய் கூற மாட்டேன்; கூறவே மாட்டேன்."

**"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்"**

எவ்வளவு கேடு ஏற்படினும், உயிருக்கே அழிவு வரினும் வாழும் வகையே அழிந்துபோகும் என்பதாயினும் அதற்காக அஞ்சேன்;

**"மெய்கூறுவல்"**

என்கிறார்.

**"வாய்மையே வெல்லும்"**

என்னும் மணிமொழியை நாட்டின் குறிக்கோளாக இந்திய நாடு இந்த இருபதாம் நூற்றாண்டில் கொண்டுள்ளது. இக்குறிக்கோளைக் கடைப்பிடித்துப் பிறர்க்கும் பறையறைந்து முழக்கிய பெரியவர் மருதன் இளநாகனார். அவர் குறிக்கோளைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு என்ன? நம் நாட்டின் வாழ்வே - வெற்றி கொள்ளும் என்பதற்கு ஐயம் உண்டா?

# 7. புனைந்துரை புகலேன்

ஒரு காடு; அக் காட்டில் இருந்த ஒரு மரத்தின் அடியிலே ஒரு பெரியவர் சோர்வுடன் அமர்ந்திருந்தார். அவரின் எதிரே வில்லேந்திய வீரன் ஒருவன் வந்து நின்றான். அவன் தோற்றப் பொலிவைக் கண்ட பெரியவர்க்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழும்ப வேண்டும் போல் இருந்தது. எழுந்திருக்க முடியாத அளவுக்கு அவருக்குச் சோர்வு இருந்தது. ஆயினும் எழுந்திருக்க முயன்றார். வீரனோ பெரியவர் நிலைமையை நன்கு அறிந்து கொண்டான்.

“பெரியவரே! எழும்ப வேண்டா! அப்படியே அமர்ந்திரும்” என்பவன் போலத் தன் கையை அசைத்து அமரச் செய்தான். அங்கிருந்தும் விரைந்து சென்றான். அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டே, அவன் தோற்றத்திலும் நடையிலும் ஈடுபட்டார் பெரியவர்.

போன வீரன் ஒரு விலங்கை வில்லால் வீழ்த்தினான்; தானே தீ மூட்டினான்; விலங்கின் நல்ல தசையை வாட்டினான்; கொண்டுவந்து பெரியவர்க்குப் பரிவுடன் தந்தான். பெரியவரோடு வந்தவர்களும் பலர் இருந்தனர். அவர்களுக்கும் வேண்டிய அளவும் தந்தான். அண்மையில் அருவி நீர் இருப்பதைச் சுட்டிக் காட்டினான். ஊன் உண்டும், நீர் பருகியும் இன்புற்றனர்.

வில் வீரன் செய்த உதவியை நினைத்து விம்மிதம் அடைந்தார் பெரியவர். அவன் யாவன் என்பதைத்

தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவன் ஊர் எது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் ஆவல் கொண்டார். அந்த ஆவலால் "வீரனே! உன் பெயர் என்ன? உன் ஊர் எது?" என வினாவினார்.

வீரனோ இவ்வினாக்களுக்கு விடை தரவில்லை. பெரியவர் கேட்பதையே தன் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லை. "பெரியவரே! காட்டில் இருக்கிறேன்! உமக்கு என்னால் என்ன தரமுடியும்" என்று கூறினான். தன் கையில் கிடந்த கடகத்தையும் கழுத்தில் கிடந்த மாலையையும் கழற்றித் தந்து அவ்விடத்தில் இருந்து விரைவாகப் போய் விட்டான்.

அவன் செயல்களிலும், சொற்களிலும் தம்மை மறந்து போனார் பெரியவர்; அவனையே பார்த்துக் கொண்டு நின்றார். பிறகு பலரிடமும் கேட்டுக் கேட்டு, வள்ளல் நள்ளி அவன் என்றும், தோட்டிமலையின் அரசன் என்றும் அறிந்து கொண்டார் பெரியவர்.

சரி, பெரியவர் பெயர் என்ன? என்பதைத் தெரியவேண்டுமே! பெரியவர் வன்பரணர் என்பவர். சங்கச் சான்றோர்களுள் ஒருவர். எதிர்பாரா நிலையில் வள்ளல் நள்ளியைக் கண்டு அதன் பின்னர் அவன் மேல் அன்பு கொண்டு வாழ்ந்தவர். பிறர் பாராட்டுவதற்காகவோ, பரிசு பெறுவதற்காகவோ புனைந்துரைப்பதை அறியாத பெரியவர்.

உண்மையை மாற்றியோ மறைத்தோ கூறுவது பொய்! அதன் தீமையை மருதன் இளநாகனார் வற்புறுத்தியதை முன்னே அறிந்தோம். புனைந்துரை என்பது, இல்லாத நல்ல தன்மைகளை எல்லாம் ஒருவனிடம் இருப்பதாகக் கூறுவதாகும்! ஏன் இல்லாத

தன்மைகளையெல்லாம் ஒருவனுக்குக் கூறவேண்டும்? அவனை மகிழச் செய்து, அதனால் அவனிடம் இருந்து தாம் விரும்பும் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யும் ஏமாற்று வழி இதுவாகும். இந்த வழியை வன்பரணர் வெறுத்தார். கடுமையாகக் கண்டிக்கவும் செய்தார்.

ஒருநாள், நள்ளி வன்பரணரிடம் "நானோ ஒரு சிற்றரசன்; இன்னும் பெரிய அரசர்கள் பலர் உள்ளனர். அவர்களை நெருங்கிச் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடினால் மிகுதியான நன்மைபெறலாமே! என்னால் தங்களுக்கு என்ன நன்மை ஆகிவிடப் போகிறது?" என்றான். இவ்வுரைகளைக் கேட்ட வன்பரணர் புன்முறுவல் பூத்தார். தம் கருத்தைக் கூறத் தொடங்கினார்:

"அரசே! நீ கூறியவாறு பேரரசர்களைத் தேடி அவர்கள் புகழைப் பாடுபவர்கள் இருக்கலாம். அவர்களிடம் இல்லாத தன்மைகளையும் இருப்பதாகச் சொல்லி மகிழச் செய்யலாம். அவர்கள் தரும் பரிசுகளைக் கொண்டு பல காலம் வாழவும் செய்யலாம். ஆனால், நான் அவற்றை விரும்பேன்.

"உண்மையாகவே பெருந்தன்மையும், ஆற்றலும் இல்லாத அரசர்களைப் புகழும் புகழ்ச்சியை விரும்பி, அவ்வரசர்கள் செய்யாதவற்றையெல்லாம் சொல்லிப் பாராட்டுவதற்கு எம்முடைய சிறிய நாக்கு இசையாது" என்றார்.

> **"பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்**
> **செய்யா கூறிக் கிளத்தல்**
> **எய்யா தாகின்றுஎம் சிறுசெந் நாவே"**

என்பது அவர் வாக்கு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வன்பரணர் இவ்வளவு வற்புறுத்திக் கூறியும் இன்று நாட்டில் காண்பதென்ன?

இப்படிப் பட்டவர்! அப்படிப் பட்டவர்! மேதை! மாமேதை! வீரர்! வீரர்க்கு வீரர்! தொண்டர்! தொண்டருள் மாணிக்கம்! தலைவர்! தலைவருக்குத் தலைவர்! என்றெல்லாம் நேருக்கு நேரே பாராட்டுகின்றனர்! பாராட்டவும் படுகின்றனர்! சொல்பவர்களுக்கும் தெரிகிறது; இல்லாத தன்மையையே பாராட்டுகிறோம் என்று! கேட்பவர்களுக்கும் புரிகிறது; நம்மிடம் இல்லாத தன்மைகளையே கூறுகிறார் என்று! ஆனால் கூறுபவர்க்கும் மகிழ்ச்சி! கேட்பவர்க்கும் மகிழ்ச்சி! காலம் கடக்கிறது; திசை மாறுகிறது; பணமும், பதவியும் பறி போகின்றன! பொழுது விடிகிறது! வெளிச்சமாகி விடுகிறது!

புனைந்துரைப்பவர்க்கும் வெட்கமில்லை! புகழுரை கேட்பவர்க்கும் வெட்கமில்லை! கை தட்டி ஆரவாரித்து நிற்கும் பொதுமக்களுக்கும் வெட்கமில்லை! இந்நிலை மாறுமா?

மாற்றுவதற்குரிய வழியை வன்பரணர் காட்டியுள்ளார். அதனை ஏற்றுக் கடைப்பிடிக்கத்தக்க உறுதிப்பாடு உடையவர் வேண்டும். அதனைப் பிஞ்சு நெஞ்சத்திலேயே பதியச் செய்துகொண்டு பின்னாளில் நடைமுறையில் காட்ட வேண்டும்.

ஒருவன் புனைந்து புகழுரை கூறுகிறான் என்றால் தன்னை ஏமாற்ற வந்திருக்கிறான் என்று முடிவு செய்யும் உள்ளம் வேண்டும். "புகழ்ந்தது போதும்! நிறுத்து! வந்ததைக் கூறு" என்னும் வன்மை வேண்டும்.

அப்படியானால் புனைந்து கூற எவனாவது முயல் வானா? முகங்காட்டாமல் மறைந்துவிட மாட்டானா?

*"போலியாக ஒருவரைப் புகழ மாட்டேன்"*

*"போலியாகப் புகழ இடந்தரவும் மாட்டேன்"*

என்னும் உறுதி இளைய உள்ளங்களில் பதிந்தால் போதும்! வன்பரணர் வாழ்வு வெற்றி வாழ்வாகும்.

## 8. எல்லோர்க்கும் கொடு!

பரம்பரைச் செல்வர்கள் தங்கள் செல்வத்தைத் தாராளமாகச் செலவிடுவார்கள் என்றும், புதுச் செல்வர்கள் கருமித்தனம் செய்வார்கள் என்றும் உலக வழக்கில் பேசுவதுண்டு. பெரும்பாலும் ஏற்கக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் முற்றும் ஏற்கக் கூடியது அன்று.

செல்வத்தைச் செலவிடும் வழி, வகை என்பவை அவரவர் மன நிலையைப் பொறுத்ததே. பெருஞ் செல்வர்களும் சில வழிகளுக்குச் சல்லிக் காசும் செலவிடாமையைப் பார்க்கிறோம். மிக வறியவர்களும் சில வழிகளுக்கு இருப்பதை எல்லாம் செலவிடுவதுடன் கடன்பட்டும் செலவிடுவதையும் பார்க்கிறோம். ஆதலால் செலவிடுதல் அவரவர் மனநிலையைப் பொறுத்ததே ஆகும். மனநிலை என்பது குடும்பம், சூழ்நிலை, கல்வி, பழக்க வழக்கம் ஆகியவற்றால் அமைகின்றது. “எல்லோர்க்கும் கொடு” “என்னைக் கேளாமல் கொடு” “பின்னே வேண்டுமே என்று எண்ணாமல் கொடு” என்று ஒருவர் தம் மனைவிக்குக் கட்டளை இட்டார் என்றால் அவரைப் பற்றி அறியத்தானே வேண்டும்.

“எல்லோர்க்கும் கொடு” என்றாரே அவர் செல்வர் அல்லர்; மிகுந்த வறுமைக்கு உள்ளானவர். வீட்டில் சோறு இல்லாமல் பிள்ளைகள் வீட்டை

வெறுத்து வீதியில் திரிகின்றன. வீட்டை விட்டு வெளியே போக மாட்டாத குழந்தை சோற்றுப் பானையைத் திறந்து பார்க்கிறது. 'சோறு இருக்கிறதா?' என்று! சோறு இல்லாமையைக் கண்டதும் 'ஓ' என்று வீரிட்டு அழுகின்றது! அழுகையை அடக்க வேண்டுமே! தாய் என்ன செய்வாள்?

பகற் பொழுதானால், "இதோ! புலி வருகிறது; புலி வருகிறது!" என்று சொல்லி அச்சமூட்டி அடக்கு கிறாள். இரவுப் பொழுதானால் "இதோ பார்! நிலா!" "நிலா நிலா வாவா !" என்று கையைக் காட்டி, ஆட்டி ஆட்டி அழுகையை மாற்றுகிறாள். இவளிடம் தான் வீட்டுக்காரர் "எல்லோர்க்கும் கொடு" என்று சொல்கிறார்.

அவள் இப்பொழுது பணம் கிடைக்கும்; பிறகு பணம் கிடைக்கும் என நினைத்துப் பக்கத்து வீடுகளில் கடன் வாங்கியிருந்தாள்; கைம்மாற்றும் வாங்கி இருந்தாள். இனிமேல் எவரிடமும் வாங்க முடியாது என்ற அளவுக்கு வாங்கியிருந்தாள். இந்த நிலைமை யிலே தாம் "எல்லோர்க்கும் கொடு" என்று அவர் சொல்கிறார்.

அவரும் எங்கெல்லாம் அலைந்தார்! எவரெவரை யெல்லாம் கண்டார். பொய் செல்ல மனம் இல்லை அவருக்கு! புனைந்துரைக்க மனம் வரவில்லை அவருக்கு! மதிக்காமல் தருவதை வாங்கவும் மனம் வரவில்லை அவருக்கு! இந்நிலையிலே அவருக்குப் பாலைவனத் தின் இடையே பசுஞ்சோலை அகப்பட்டது போல ஒரு வள்ளல் கிடைக்கிறான். அவன் வாரி வழங்கு கிறான். அவற்றைக் கொண்டு ஆவலுடன் வீட்டுக்கு

வருகிறார். அன்பு மனைவியை அழைக்கிறார். "இனிய மனைவியே, இச் செல்வத்தை எல்லோர்க்கும் கொடு' என்று கட்டளை இடுகிறார்! அவர் உள்ளம் எத்தகைய உள்ளம்! மலையிலும் உயர்ந்த உள்ளம் அல்லவா!

அவர் யாவர்? அவருக்கு வழங்கியவன் யாவன்?

அவர் **பெருஞ்சித்திரனார்** என்னும் புலவர்; சங்கச் சான்றோர். அவருக்கு வழங்கியவன் **குமணன்** என்னும் வள்ளல்; முதிரமலைத் தலைவன்; புலவருக்காகத் தலையைத் தரவும் முன்வந்த பெரு வள்ளல்!

"எல்லோர்க்கும் கொடு" என்று மட்டும் தான் சொன்னாரா? இல்லை! இன்னும் தெளிவாக அழுத்திக் கூறினார்.

"இனிய மனைவியே, இது வள்ளல் குமணன் தந்த செல்வம். இச் செல்வத்தை உன்னை விரும்புபவர் களுக்குக் கொடு; நீ விரும்புபவர்களுக்கும் கொடு; நம் சுற்றத்தார்க்கும் கொடு; இன்னவர்க்கு என்று எண்ணாமல் கொடு; என்னிடம் கேட்டுக் கொடுக்க வேண்டும் என நினைக்காமல் கொடு; இதனைக் கொண்டு நெடுங்காலம் வாழலாம் என்றும் நினைக் காமல் கொடு; இன்னும் என்ன! எல்லோர்க்குமே கொடு" என்றார்.

பெருஞ்சித்திரனார் வறுமையிலே, செல்வம் வந்ததும் இப்படிச் சொல்ல முடியுமா? வறுமையில் தத்தளித்துக் கொண்டிருந்த மனைவியிடத்தே இப்படிக் கூற முடியுமா? நாளைக்கு என்ன செய்யலாம் என்பதை நினைக்காமல் கொடுத்துவிட முடியுமா? முடிந்ததே அவர்களுக்கு! எதனால்? அவர்கள் உள்ளம் அப்படிப் பட்டது!

பெருஞ்சித்திரனார் நமக்கு என்ன சொல்கிறார்? இக் காலத்துக்குத் தக்கவாறு என்ன சொல்கிறார்?

"எல்லோர்க்கும் கொடு" என்றார். எதை? **நம் உழைப்பை அறிவை, ஆற்றலை எல்லோர்க்கும் வழங்கச் சொல்கிறார்.** தேடிய செல்வத்தை மட்டு மன்று! நாம் பெற்ற அறிவு ஆற்றல்களையும் பிறருக்கு வழங்கவேண்டும் அல்லவா! நாம் எத்தனை பேர் உழைப்பால் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? நம் உழைப்பும் அத்தனை பேருக்கும் பயன்பட வேண்டும் அல்லவா!

நாம் தேடிய செல்வத்தை எல்லார்க்கும் கொடுக்க முடியாவிட்டாலும் எல்லார்க்கும் பயன்படும் செயல் களுக்காவது தர வேண்டுமே! அதனைச் செய்வோமா? செய்தால் பெருஞ்சித்திரனார் வாழ்த்துவார்! பெரியோர்களும் வாழ்த்துவார்கள்.

பெருஞ்சித்திரனார் பிறருக்குப் பயன்படும் செயலை எங்கே செய்யத் தொடங்கினார்? வீட்டிலே தொடங்கினார்! வீட்டிலே தொடங்காத நற்பணி நாட்டிலே ஒரு நாளும் நடக்காது! நானில அளவுக்குப் பரவவே செய்யாது! ஆகவே நற்பணிகளைத் தொடங்கு வோமாக. நமக்குப் பெருஞ்சித்திரனார் உரைக்கும் நல்லுரை:

> ***"இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது***
> ***வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்***
> ***எல்லோர்க்கும் கொடு"***

என்பது.

## 9. உரனுடையவர் உறவு உண்டாகட்டும்!

சோழன் நல்லுருத்திரன் என்பவன் ஓர் அரசன். அதே பொழுதில் அவன் உயர்ந்த புலவனாகவும் விளங்கினான். சங்கச் சான்றோர் காலத்தில் காவலர் களிலும் பாவலர்களாக விளங்கியவர்கள் பலருண்டு. அவர்களுள் சோழன் நல்லுருத்திரனும் ஒருவன். உருத்திரன் என்பது அவன் பெயர். சோழ நாட்டு வேந்தன் ஆதலாலும் மிக நல்லவனாக விளங்கியமை யாலும் சோழன் நல்லுருத்திரன் என மக்களால் அழைக்கப் பெற்றான்.

சோழன் ஒருநாள் மலைக்குப் போவான்; மற்றொரு நாள் காட்டுக்குப் போவான்; இன்னொரு நாள் வயலுக்குப் போவான்; வேறொரு நாள் ஆறு, குளம், ஏரி எனப் போவான். இப்படியே நாள்தோறும் எங்காவது சென்று இயற்கைக் காட்சிகளில் இன்புற்று வருவான்.

இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு இன்புற்றால் மட்டும் போதுமா! அப்படி இன்புற்றால் அவன் அளவுக்குத் தானே மகிழ்ச்சியும் உடல் நலமும் உண்டாகும். அந்த அளவில் சோழன் நோக்கம் சுருங்கி விடவில்லை.

காணும் காட்சிகளைக் கருத்தோடும் ஆராய் வான்; அவ்வாராய்ச்சியை மேலும் மேலும் தெளிவான்; தெளிந்ததை ஒழுங்கு படுத்துவான். அரிய கருத்துக்

களையெல்லாம் ஒருங்கு சேர்த்துக் கவியாகப் படைப்பான். தான் அடைந்த இன்பத்தைப் பிறரும் அடையச் செய்வான்! அறிவின் பயன் அதுதானே!

சோழன் ஒரு நாள் ஒரு வயலுக்குப் போனான். நெல் வயல் அது; நெல் கதிர் ஈன்று மணி பிடித்துத் தலை சாய்த்து நின்றது. அறுவடைக்குத் தக்கவாறு மணி முதிர்ந்து விட்டது. ஆனால், அந்நிலையில் அவ் வயலில் எலிகள் கொண்டாட்டமாகத் திரிவதைக் கண்டான்.

விளைந்த பருவத்தை எதிர் பார்த்து இருந்த எலிகள் கதிரைக் கத்தரிப்பதையும், இழுத்துக் கொண்டு போவதையும் வளைக்குள் சேர்ப்பதையும் மறைந் திருந்து பார்த்தான். ஆளைக் கண்டால் மறைந்து விடுமே எலி! அதன் செயலை எல்லாம் முழுமையாகக் காண வேண்டாவா? அதனால் வெளிப்படாமலும், ஒலி படாமலும் இருந்து எலியின் செயலைப் பார்த்தான்.

"இப்பொழுதுக்கு உணவு கிடைத்தால் போதும் என எண்ணவில்லை; சரியான பொழுதைப் பார்த்து நெடுங்காலத்துக்கு வேண்டிய உணவைச் சிறு முயற்சியால் தேடி வைத்துக் கொள்ளும் எலியின் செயல், உழைத்தவனுக்குத் தெரியாமல் மறைந்து போய்த் திருடிக் கொள்ளும் செயல் பெருமை தருவது இல்லை. சிறுமை தருவதேயாகும்" என எண்ணினான்.

வயலில் இருந்து அரண்மனைக்கு வந்த பின்னரும் உருத்திரன் உள்ளத்தில் இருந்து எலியைப் பற்றிய எண்ணம் நீங்கவில்லை. எலியைப் போன்ற தன்மை யுள்ள மக்களும் உலகில் இருக்கத்தானே செய்கின்றனர்!

அகப்பட்ட இடத்தில் யாருக்கும் தெரியாமல் பொருளைச் சுருட்டி, ஒரு காசும் ஒருவருக்கும் கொடாமல் கருமிகளாக இருப்பவர் எத்தனை பேர்! முயற்சி இல்லாதவர் எத்தனை பேர்! இவர்களெல்லாம் இவ்வெலியைப் போன்றவர்களே! இவர்கள் தொடர்பு எவருக்கும் உண்டாகக் கூடாது! எனக்கு அறவே கூடாது! எனத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

சோழன் மற்றொரு நாள் ஒரு பெருமலைக்குச் சென்றான். அங்கே ஒரு புலியைக் கண்டான்! குகையில் இருந்து பெருமித நடையுடன் வெளிவரக் கண்டான். இதோ ஒரு பன்றி! புலி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பன்றியை மேலே தூக்கி எறியக் கண்டான். பன்றி ஒரு பனை உயரத்திற்கு மேலே சென்று கீழே விழுந்தது. “இனிப் பன்றி பிழைக்காது! செத்தது! புலியின் ஆற்றல் தான் என்ன? எவ்வளவு எளிமையாக வேட்டையாடி வீழ்த்தி விட்டது. இன்று அதற்கு நல்ல வேட்டை தான்” என நினைத்தான். அதற்குள் பன்றியை ஏறிட்டுப் பார்க்காமல் போட்டுவிட்டுப் புலி போய்விட்டது. வந்த விரைவென்ன! அடித்த உயரமென்ன! எறிந்த திறம் என்ன! பன்றியைப் போட்டுவிட்டுப் போகும் விரைவென்ன! சோழன் ஆழ்ந்து எண்ணினான். புலியின் செயல்கள் புதிராக இருந்தன. அப்பொழுது தான் அவனுக்கு ஒரு செய்தி நினைவுக்கு வந்தது.

“புலியால் வீழ்த்தப்படும் விலங்கு. அதன் இடப்புறம் வீழ்ந்து பட்டால் அதனைத் தின்னாது; வலப்பக்கம் வீழ்ந்தால் தான் தின்னும்” என்பதே அச் செய்தி. ஆமாம்! இப்பொழுது பன்றி புலியின் இடப் புறம் வீழ்ந்தமையால் தான் தனக்கு இழிவு வந்ததாக

எண்ணித் தின்னாமல் போய் விட்டது! என்ன மானம்! என்ன பெருமிதம்!" என வியந்தான்.

புலி எங்கே போகிறது? அதன் குகைக்கே போகக் கண்டான். இன்று அது வெளிவரப் போவது இல்லை. வேறு விலங்கை வேட்டையாடப் போவதும் இல்லை. இன்று பட்டினி! தன் இழிந்த செயலுக்குத் தானே தண்டனை ஏற்றுக் கொள்கின்றது. அதற்குத் தண்டனை தருவார் எவர்?

பொழுது போனது; மறுநாள் ஆனது; புலி குகையை விடுத்து வெளியேறியது; நேற்றைப் போல் இன்று பன்றியை வேட்டையாட விரும்பவில்லை. இழந்த பெருமையை மீட்க வேண்டுமானால் அதனினும் உயர்ந்த வேட்டையாட வேண்டும்போல் இருந்தது. அதனால் வலிய ஆண் யானை ஒன்றைத் தாக்கியது; தன் வலுவெல்லாம் கூட்டித் தூக்கி எறிந்தது! வலப்பக்கம் விழுமாறு வீழ்த்தியது. தன் ஊக்கத்தால் கிடைத்ததும், மானத்தில் குறையாததும் ஆகிய களிற்றின் இரையைக் களிப்புடன் கொண்டது. மறுநாளும் வந்து இக் காட்சியைக் கண்டான் சோழன்! வியந்தான்!

"புலி பசித்தாற் போலும் குறையாத முயற்சி உடையவர்களும், வலியவர்களும் உலகில் இருக்கத் தானே செய்கின்றனர். அத்தகையவர் நட்பு எனக்கு வாய்க்குமாக! பிறருக்கும் அவர்கள் நட்பே கிடைக்கு மாக! அவர்களுடன் கூடி மகிழும் நாள்களே வருவ தாக! என நினைத்தான்.

சோழன் நினைவு, நினைவளவில் நின்றிருந்தால் நமக்கு ஆவது என்ன? அவனோடு அழிந்து போயிருக்

குமே! அல்லது அவனுடன் இருந்தவர்களுடன் மறைந்து போயிருக்குமே! அவன் பாவலன் அல்லனோ! அதனால் தன் கருத்தையெல்லாம் கூட்டிப் பன்னிரண்டு அடிகளில் ஒரு பாட்டாகப் பாடி வைத்துள்ளான். அப்பாட்டே அவன் கண்ட காட்சியையும், அவன் கருதிய கருத்தையும் நமக்கு இன்றும் காட்டுகின்றது.

**"மெலிவில் உள்ளத்து,**
**உரனுடை யாளர் கேண்மையொடு**
**இயைந்த வைகல் உளவா கியரோ"**

என்பது அவன் பாடிய பாடலின் இறுதியடிகள்.

(குறைவில்லாத கொள்கையை உடைய வலிமை வாய்ந்தவர் நட்பொடு கூடிய நாள் உண்டாவதாக)

பொழுது எழும்! பொழுது விழும்! நாள் போகும்! நாமும் போவோம்! இதுதான் வாழ்வா? நல்ல நட்பு வாய்க்காத வாழ்வு வாழ்வா?

நண்பர் என்று காட்டிக் கொண்டு வாயாரச் சொல்லிக் கொண்டு - எத்தனை பேர் வருகின்றனர். எத்தனை ஏமாற்றங்களையும், நம்பிக்கைக் கேடுகளையும் செய்கின்றனர் உள்ளதைப் பறித்துக் கொண்டு ஊரை விட்டே தலைமறைவாகி விடுகின்றனர்! இத்தகையவர்கள் எலி போன்றவர்கள் தாமே! இவர்கள் நட்பு வேண்டுமா நமக்கு? இவர்கள் நட்பு உண்டாகி நாம் கெடுவதைப் பார்க்கிலும் நமக்கு வாழ்நாளே இல்லாமல் கெட்டுப் போகலாமே! "இருந்த வரை நன்றாக இருந்தோம்!" என்று அமைதியோடு இறக்கலாமே! இந்த அமைதியைத் தராத எலி போன்றவர் நட்பு நமக்கு எதற்காக வேண்டும்?

புலி வலியது தான்! ஆனால் மானம் உடையது! ஊக்கம் உடையது! செய்யும் செயலைத் துணிந்து செய்கின்றது! அத்தகையவர்கள் நட்புக் கேடுதராது. மறைந்து கெடுப்பதும், உழைக்காது கெடுப்பதும், இழிவழி என்று எண்ணாமல் துணிந்து செய்து கெடுப்பதும் தானே பெருங்கேடு! புலியினிடம் அத்தன்மை இல்லையே! ஆதலின் புலி போன்றவர் உறவு நமக்குப் பொருந்துவதாக! என்றான்.

இன்றைக்கும் பொருந்தும் அல்லவா சோழன் சொல்லிய நல்லுரை!

> ***"சூழ்ச்சிக் காரரையும் சோம்பரையும் சேராதே"***
>
> ***"முயற்சியும் மானமும் வலிமையும் உடையாரைப் பிரியாதே"***

என்று சோழன் நமக்கு இன்றும் சொல்கிறான் அல்லவா?

## 10. "சான்றோர் சான்றோர் பாலர் ஆக"

ஆட்டு மந்தையில் செம்மறியாடு செம்மறியாட்டுடனும், வெள்ளையாடு வெள்ளையாட்டுடனும், கூட்டாகத் திரியக் காணலாம். அவ்வாறே மாட்டு மந்தையிலும், பசுக் கூட்டம் தனியாகவும், எருமைக் கூட்டம் தனியாகவும் திரியப் பார்க்கலாம். அதனால், அதன் இனத்தை அது சேர்ந்திருக்கிறது என்பது தெரியும். ஆனால், மனிதர்கள் எல்லாரும் ஓரினம் தானே! எல்லாரும் ஓர் உள்ளத்தோடு ஒன்றுபட்டுத் திரிகிறார்களா? இல்லையே! ஏன்?

ஆடு மாடுகளைக் கூர்ந்து பார்ப்போம்! அதோ..! ஒரு முட்டும் மாடு வருகின்றது! அதனைக் கண்டதும் அஞ்சி ஓடுகின்றது அல்லவா ஒரு மாடு! அதே மாடு இன்னொரு மாட்டுடன் கழுத்தோடு கழுத்தைப் பின்னி நெருங்கி நிற்கிறது அல்லவா! முட்டுக் கடாவைக் கண்டதும் எத்தனை இளைத்த கடாக்களும், ஆடுகளும் அஞ்சி ஓடுகின்றன? மேலோட்டமாக இனத்தோடு சேர்ந்து திரிவது தெரிந்தாலும் ஆடு மாடுகளுக்குள்ளும் சேர்ந்தவை, சேராதவை என்று பிரிவு இருப்பதை உணரலாம்.

ஆடு மாடுகள் ஐயறிவுடையவை. மனிதன் ஆறறிவுடையவன்; எந்த ஒன்றையும் துருவித் துருவி ஆராய்பவன்; நல்லது கெட்டது, தக்கது தகாதது, ஒழுக்கம் இழுக்கம், பெருமை சிறுமை என்றெல்லாம்

பகுத்துப் பகுத்துப் பார்க்கும் திறம் உடையவன்! பேச்சும் எழுத்தும் வளர்ந்தவன்! எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பவன்! இவ்வளவெல்லாம் வளர்ந்தவன் எப்படி எல்லோரையும் ஒப்பாகக் கருதுவான்? எல்லாரோடும் இணைந்து திரிவான்?

ஒரு சொல் சொன்னாலே தாங்கமாட்டாதவனும் மனிதன் தான்! "தோலுக்கு மேலே தொண்ணூறு அடி; துடைத்துப் பார்த்தால் ஒன்றுமில்லை" என்று வாழ்பவனும் மனிதன் தான்!

"என்னை இகழ்ந்து தந்த இந்த நீரைப் பருக மாட்டேன்" என்று நீர் பருகாமல் கிடந்து இறப்பவனும் மனிதன் தான்! "இல்லை போ"! என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியும் போகாமல், காலைப் பிடித்துக் கஞ்சி வாங்கிக் குடித்து வாழ்பவனும் மனிதன்தான்! இவர்கள் ஒப்பானவர்கள் தாமா? ஒன்றுபட்டு உறவாடி வாழத்தக்கவர்கள் தாமா?

"உன் நண்பனைச் சொல்; உன்னைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்" என்பதொரு பழமொழி. இப் பழமொழி என்ன சொல்கின்றது? அவரவர் குணத்துக்குத் தக்கவர்களோடு தாம் நட்புடையவராக இருப்பர் என்பதேயாகும். நட்பின் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இருவரை இங்கே காண்போம்.

பாண்டி நாட்டுக் கடற்கரையை அடுத்திருந்த ஓர் ஊர் பிசிர் என்பது. அவ்வூரில் ஆந்தையார் என்னும் பெயருடைய நல்லோர் ஒருவர் இருந்தார். அவரைச் சான்றோர்கள் 'பிசிராந்தையார்' என்று பெயரிட்டு அழைத்தனர்.

பிசிராந்தையார் சங்கச் சான்றோர்களுள் ஒருவர்; பாண்டிய நாட்டு வேந்தன் அறியப், பெருமையுடன் வாழ்ந்தவர். **அவனுக்கு அறவுரை கூறும் திறம் பெற்று விளங்கியவர்.** சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ் சோழன் தன்மைகளைக் கேள்வியால் அறிந்தவர்; அவனைக் கண்டது இல்லை! காணாமலே அச் சோழன்மேல் அளவற்ற அன்பு செலுத்தினார்; நட்பும் கொண்டார். பாராமலே பழகாமலே நட்பும் உண்டாகுமா? உண்டாகி இருக்கிறதே!

பழகியவர்களிடம் எல்லாமா நாம் நட்புக் கொண்டிருக்கிறோம்! நட்புக்கும் பார்த்துப் பழகு வதற்கும் தொடர்பு இல்லை! நெஞ்சத்தில் வளர்வது நட்பு! நெஞ்சத்தில் வாழ்வது நட்பு! நெஞ்சத்தின் முதிர்விலேயே பூத்துக் காய்த்துக் கனிவது நட்பு! அதற்கும் நெருக்கத்திற்கும் தொடர்பு இல்லை.

கோப்பெருஞ்சோழன் சோழ நாட்டு மன்னன். அவன் நாட்டில் அவன் கீழ் எத்தனை பெரியவர்கள் இருந்திருப்பர்! சான்றோர்கள் இருந்திருப்பர்? அவனுக்கு எத்தனை எத்தனை அமைச்சர்கள்! அலுவலர்கள்! அவர்களிடம் காட்டாத நட்பைப், பார்த்தறியாத பாண்டிய நாட்டுச் சிற்றூரின் ஒரு மூலையில் வாழும் ஒருவர்மேல் கொள்ள வேண்டுமா? மன்னனுக்கு இருந்த பல்வேறு கடமைகளுக்கு இடையே - அல்லல் களுக்கு இடையே - பிசிராந்தையார் நினைவாகவே இருக்க முடியுமா? முடிந்தது மட்டுமா? உன் பெய ரென்ன என்றவருக்கு "பிசிராந்தையார்" என்றானாமே! பிசிராந்தையார் தம் பெயர் "கோப்பெருஞ்சோழன்" என்றாராமே!

பெயர் மட்டும் தானா அவர்கள் நெஞ்சத்தில் மாறிக் கிடந்தது! அவர்கள் உடலுக்குள் உயிரும் அல்லவா மாறிக் கிடந்தது! சோழன் உண்ணா நோன்பு கொண்டு வடக்கிருந்தான். ஒரு கொள்கைக்காகச் சாகத் துணிந்தவர் அந் நாளில் அவ்வாறு செய்வது வழக்கம். அவ்வழக்கப்படி உண்ணாவிரதம் இருந்த சோழன் தன் பக்கத்திலே இன்னோர் இடத்தை ஒதுக்கி வைத்தான். "இவ்விடம் யாருக்காக?" என்றுஅருகில் இருந்தவர் சோழனிடம் வினாவினர். சோழன் "பிசிராந்தையார் வருவார்; என் செல்வக் காலத்தில் அவர் வந்தது இலர்; இப்பொழுது வாராது இரார்" என்று கூறினான்.

பிசிராந்தையாருக்குச் சோழன் வடக்கிருப்பது எப்படித் தெரியும்? சோழநாடு எங்கே? பாண்டிய நாடு எங்கே? இது நடைபெறும் செயலா என்ன! என்று ஆங்கிருந்தவர்கள் ஐயுற்றனர். பிசிராந்தையார் உயிர் சோழனிடம் தானே இருக்கிறது? அதை அவன் தானே அறிவான்! மற்றவர்கள் அறிவார்களா?

சோழன் வடக்கிருந்த இடத்திற்குப் பிசி ராந்தையார் ஓடோடியும் வந்தார். இவர்கள் தன்மையை என்ன சொல்வது! "இப்பொழுது இங்கு வருவான்" என்ற அரசன் வாக்கை நினைத்தனர். அவ்வுரை பொய்யாகாமல் வந்த பிசிராந்தையார் பெருமையை நினைத்தனர்! நினைத்து நினைத்து வியப்புற்றனர். நெஞ்சம் உருகினர்.

அங்கிருந்த ஒருவர் கண்ணகனார் என்பவர். அவர், இவர்கள் சேர்ந்த காட்சியிலே உள்ளத்தைப் பறி கொடுத்தார்! "சான்றோர் சான்றோரையே சேர்வர்;" என முடிவு செய்தார்.

பொன் எடுக்கப்படும் இடம் வேறு; பவழம் கிடைக்கும் இடம் வேறு; முத்து உண்டாகும் இடம் வேறு; மணி கிடைக்கும் இடம் வேறு; ஆயினும் என்ன? ஒரே மாலையாகி எத்தகைய ஒளி செய்கின்றன? அதுபோல் சான்றோர்கள் எங்கே பிறந்தால் என்ன! எங்கே வளர்ந்தால் என்ன! அவர்கள் ஒன்றாகவே வாழ்கிறார்கள்! என்று உவகை ததும்ப நினைத்தார். அவர் நினைவு ஒரு பாட்டாக மலர்ந்தது. அப்பாட்டின் மணி முடியாக நிற்கிறது,

**"சான்றோர், சான்றோர் பாலர் ஆப;**
**சாலார் சாலார் பாலர் ஆகுபவே"**

என்பது.

இன்றைக்குக் கண்ணகனார் நமக்கு என்ன சொல்கிறார்.

எங்கள் காலம் உணர்வால் வாழ்ந்த காலம்! இப்பொழுது உதட்டால் வாழும் காலம்! எங்கள் காலம் உள்ளும் புறமும் ஒத்த காலம்! இப்பொழுது உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் காலம்! எங்கள் காலம் கெட்டவன் கெட்டவனாகவும், நல்லவன் நல்லவனாகவும் எளிமையாகக் கண்டு கொள்ள வாய்ப்பிருந்த காலம். இப்பொழுது எவரையும் இத் தன்மையர் என்று முடிவு கட்ட முடியாமல் திறமையாக ஏமாற்றத் தெரிந்த காலம். அதனால்,

**"சேரிடம் அறிந்து சேர்"**

**'சேராத இடந்தனிலே சேர வேண்டா'**

என்பதை உணர்ந்து கடைப்பிடிக்கவும் என்பார்!

உடலுறுப்புகளைக் கொண்டு ஒப்புமை கொள்வது இல்லையே! உள்ளத்தைக் கொண்டல்லவா ஒப்புமை கொள்ள வேண்டும்?

*"உறுப்பொறுத்தல் மக்கள்ஒப் பன்றால் வெறுத்தக்க*
*பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"*

-பொய்யாமொழி.

## 11. மன்னா உலகத்து மன்னுக

காலையில் அரும்பிய பூ மாலையில் முகை (மொட்டு) ஆகும். மறுநாளில் மலர் ஆகி, அலரும் ஆகி விடும்! பின்னர் அதன் நிலை என்னாகும்? கொடியில் இருந்து உதிர்ந்து காய்ந்து குப்பையாகிப் போகும்.

இளந்தளிர் சில நாள்களில் பச்சிலையாகிப் பின்னர் முதிர்ந்து போகும். சருகாகிக் காற்றில் பறக்கும். மண்ணில் பட்டு மட்கியும் போகும்!

முட்டை, குஞ்சு ஆகும்; குஞ்சு, கோழியாகும்; கோழி சிறிது காலம் வாழ்ந்து சாவும் அல்லது சாகடிக்கப்படும்!

புள்ளிமானை வெருட்டிக் கொல்லும் புலியும் ஒருநாள் புழுத்துச் சாகும்!

புழுவைத் தின்னுவதற்கு மீன் திரியும்; அம் மீனைத் தின்னக் கொக்கு அலையும்; அக் கொக்கைக் கொல்ல மாந்தன் துமுக்கி (துப்பாக்கி)க் கையோடு திரிவான். அவனைக் கொன்று தின்னக் கொடு விலங்குகள் உண்டு! அவ் விலங்குகளைத் தின்னவும் புழுவும் பூச்சிகளும் உண்டு! .இவ்வாறு பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் இயற்கையுடையது இவ்வுலகம்.

அடைந்த பிறப்பில் அழியாமல் இருக்க வழி யுண்டா? வழியுண்டு என்பது சான்றோர் கருத்து.

அதனை அவர்கள் வாழ்வு காட்டுகின்றது. அவர்கள் வழங்கிய உரைகள் தெளிவு செய்கின்றன.

கோலையே காலாகக் கொண்டு நடக்கும் தளர்ச்சி, முற்றத்திற்கும் செல்ல மாட்டா முதுமை, கொக்கிறகுப் போல் தோன்றும் நரை, 'அஃகுவஃகு' என்று ஓயாது ஒலியெழுப்பும் இருமல் - முதலியவை எல்லாம் மாந்தருக்கு வந்து வாட்டுவதை உணர்ந்து தான் சங்கச் சான்றோர்கள் இருந்தனர்.

மணப்பறையே பிணப்பறையாய்க் கேட்டநிலை, பிறப்புப் பெருமங்கலம், இறப்பின் இரங்கல், நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேள் அலறச் சென்றான் என்னும் உண்மை முதலியவற்றை எல்லாம் கண்டு கனிந்துருகித்தான் நின்றனர் சங்கச் சான்றோர்.

"இருபதில் எழுச்சி; முப்பதில் முறுக்கு; நாற்பதில் நழுவல்; ஐம்பதில் அசதி; ஆறுபதில் ஆட்டம்; எழுபதில் ஏக்கம்; எண்பதில் தூக்கம்" என்பதையும் தான் உணர்ந்திருந்தனர். ஆயினும் மக்கள் வாழ்வு நிலையாமையுடையது எனக் கருதினர் அல்லர். நிலைக்கக் கூடியது என்பதைத் தெளிந்தே இருந்தனர்.

"உடலுக்கு முதுமையுண்டு; அழிவும் உண்டு. உயிருக்கு அழிவு இல்லை" என்பது அவர்கள் கண்ட உண்மை. ஆனால், அவ்வுயிர் உடலைக் கொண்டே உலகவர் கண்முன் உலாவருகின்றது. அவ்வுடல் உள்ள போதே செய்யும் செயலால் அழியா உடல் ஆக்கி விடலாம் என்பதை வற்புறுத்துவதற்காகவே "நிலையாமை" என்பதை விரிவாகக் கூறியுள்ளனர்.

இறைவன் வாழும் கோயில் உடல்; 'ஊன் உடம்பு ஆலயம்' என்பது திருமந்திரம். அவ் வூன் உடம்பைச்

சாவும் உடம்பு ஆக்குவதும் சாவா உடம்பு ஆக்குவதும் அவரவர் செயல்களிலே தாம் உள்ளன. அழியும் உடலைக் கொண்டு அழியா வாழ்வு பெறுவது கடன் என்பதற்காகவே அதனை 'மெய்' என்றனர். மெய்யிற்கு அழிவு உண்டா?

ஆலம் பழத்துள், ஓர் இரவுப் பொழுதுக்குள் ஆயிரக் கணக்கில் புழுக்கள் தோன்றி விடுகின்றன. சாணத்திலும், குப்பையிலும் சாக்கடை நீரிலும் பல்லாயிரம் புழுக்கள் நாள் தோறும் தோன்றி மடிகின்றன. "எப்படித் தோன்றின! எப்படி வாழ்ந்தன! எப்படி இறந்தன! எப்பணியைச் செய்தன!" என்றெல்லாம் அவற்றின் வரலாற்றை எழுதி வைத்து அழியா வாழ்வுடையனவாக அவை போற்றப் பெறுவது இல்லை.

ஆனால், திரு.வி.க. வாழ்வும், வள்ளலார் வாழ்வும், வள்ளுவனார் வாழ்வும், காந்தியடிகளார் வாழ்வும், விவேகானந்தர் வாழ்வும், நபிகள் நாயகம், கிறித்து பெருமான், புத்தர் பெருமான், அருகதேவர் ஆகியோர் வாழ்வும அத்தகையனவா? எத்தனை கோடி வாய்கள் அவர்கள் புகழ்பாடுகின்றன! எத்தனை கோடி கைகள் அவர்களைப் பற்றி எழுதுகின்றன! எத்தனை கோடி நெஞ்சங்களில் அவர்கள் வாழ்கிறார்கள்! அவர்களுக்கு அழிவு உண்டா? அழியும் உடல் கொண்டே அழியா வாழ்வு பெற்றவர்கள் அல்லரோ அவர்கள்! ஒருடலில் இருந்த அவர்கள் கோடிக் கணக்கான உடலில், உணர்வுகளில், உயிர்களில் ஒன்றிவிட்டார்கள் அல்லரோ!

இக் காட்சியைச் சங்கச் சான்றோருள் ஒருவ ராகிய பெருந்தலைச் சாத்தனார் கண்டார். எப்படிக் கண்டார்?

சமைத்தலை அறியாத அடுப்பு; அவ் வடுப்பிலே காளான் பூத்திருக்கிறது!

குழந்தை பசியால் தாயை நோக்குகிறது! தாய் யாரை நோக்குவார்? தம் கணவரை - பெருந்தலைச் சாத்தனாரை - நோக்குகிறார். சாத்தனார் வள்ளல் குமணனை நோக்குகிறார்.

குமணன் நாடாளும் வேந்தனாக உள்ளானா? இல்லை! காடாண்டு கொண்டிருக்கிறான். குடும்பப் பகை! நாட்டை விட்டுக் காட்டில் திரிகிறான்! புலவர் வீட்டு வறுமை காட்டுக்கும் ஓட்டுகிறது! காது கொடுத்துக் கேட்பவரிடத்திலே தானே தம் வறுமையைக் கூற முடியும்! அவர் தாமே கேளிர். (உறவினர்) காது கொடுத்துக் கேட்காதவர் கேளிர் ஆவரா? அவர் கேளார் (பகைவர்).

ஆறுதல் அளிப்பார் நாட்டில் இருந்தால் என்ன? காட்டில் இருந்தால் என்ன? அவரிடம் தானே அருள் உள்ளது. அஃதில்லார் எங்கே இருந்தால் என்ன? அவரால் ஆவதும் என்ன?

புலவர் பெருந்தலைச் சாத்தனார் குடும்ப நிலைமையைக் குமணனிடம் கூறினார். நாட்டை இழந்து காட்டில் திரிவது பற்றி அவனுக்கு அதுவரை தோன்றாத கவலை தோன்றியது. தான் நாட்டில் இல்லாமல் - அரச வாழ்வில் இல்லாமல் - இருப்பதால் தானே இப் புலவர் நிலைமை இவ்வாறாகியது எனத் தன்னை நொந்து கொண்டான்.

அருள் இல்லாதவனாக அவன் இருந்தால் எவ்வளவு எளிமையாகச் சொல்லியிருப்பான்! "புலவரே! நீர் கற்றறிந்தும் காலநிலை அறியாதவராக உள்ளீரே! நான் படுகிற பாட்டில் உம் பாட்டைக் கேட்க என்னால் முடியுமா? சாவா? வாழ்வா? என்ற சஞ்சலத்தில் உள்ளேன் நான்! உம் வாழ்வைப் பற்றி உரைக்க வந்தீர்! போம் ஐயா போம்" என்று பேசி இருப்பான்! ஆனால், வள்ளல் குமணன் நிலை நேர்மாறாக இருந்தது.

"பாடி வந்த புலவன் பரிசில் ஒன்றும் இல்லாமல் திரும்புவது நான் நாடு இழந்த துன்பத்திலும் பெருந் துன்பம் ஆகும்" என எண்ணினான். புலவருக்கு உதவு தலே கடமை என உறுதி கொண்டான். அவனிடம் இருந்த பொருள்தான் என்ன? 'வாள்' ஒன்றே இருந்தது. அதனை எடுத்தான். புலவரிடம் தந்தான். "புலவரே! இவ்வாளைக் கொண்டு என் தலையை வெட்டும். என் சாவை விரும்புவோனிடம் அதைச் சேர்ப்பியும். பகைவன் அழிந்தான் எனப் பாராட்டுவான்! உமக்கும் பரிசு வழங்குவான். உமக்கு உதவாத தலை, வறுந்தலை! புன்தலை! எடுத்துக் கொள்ளும்; புகழ்த்தலை என்னும் பேற்றை அருளும்!" என்றான்.

புலவர் உள்ளம் வள்ளல் தலையைக் கொள்ளவும் துணியுமோ? புலமை வேலை செய்தது. குமணன் செயலைக் கொண்டே அவன் பகைவனுக்கு நல்லறிவு கொளுத்தத் துணிந்தது. காட்டுக்கு நல்லவனை ஓட்டிவிட்டு, நாட்டிலே அரண்மனை இன்பத்திலே உலாவுகின்றானே உள்ளமில்லா ஒருவன், அவனைக் கண்டார்!

"பொன்னைக் கொடுப்பார் உளர்; பொருளைக் கொடுப்பார் உளர்; நாடு நகரை வழங்குவார் உளர்; தம்மைக் கொடுப்பார் உளரோ? உள்ளார் என்பதை உணர்ந்தேன்; அந்த உவகையிலே வந்தேன்" என்று தொடங்கி நிகழ்ந்த அனைத்தும் கூறினார். பிரிந்தவர் களைச் சேர்த்துப் பெருமிதம் கொண்டார்!

அரண்மனைக்குள் சென்ற புலவர் அரச செல்வத்தையே அழியாச் செல்வம் என எண்ணி இருந்தானே அவனை நோக்கி எத்தகைய நயமாக உரைக்கிறார்!

"நிலை பெறாத உலகத்தில் நிலை பெறுவதைக் கருதியவர், தம் புகழை இங்கே நிலைபெறச் செய்து தாம் இறந்தனர். பெருஞ் செல்வச் செழிப்புடையவர் ஆயினும் இரந்து வந்தவர்க்கு ஈயாமையால் கொடை யாளர் வரிசையில் வைக்கப் பெற்றார் அல்லர்; வறிதே மாய்ந்து ஒழிந்தனர்" என்றார்.

> **"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
> **தம்புகழ் நீறீஇத் தாம்மாய்ந் தனரே;**
> **துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்**
> **இன்மையின் இரப்போர்க் கீஇ யாமையில்**
> **தொன்மை மாக்களின் தொடர்பறி யலரே"**

என்பது பெருந்தலைச் சாத்தனார் வாக்கு.

'ஒரு நிலைப்படாத இந்த உலகத்தில் புகழ் ஒன்றுமே அல்லாமல் நிலைப்பது ஒன்றும் இல்லை' என்னும் பொருளமைந்த குறளுக்கு விளக்கம் அல்லவா பெருந்தலைச் சாத்தனார் வாக்கு?

> **"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்**
> **பொன்றாது நிற்பதொன் றில்"**

என்பது திருக்குறள்.

சாத்தனார் வள்ளல் குமணனைத் தேடிச் சென்றது ஏன்? குமணன் தந்த வாளையே முதலாகக் கொண்டு அரண்மனைக்குச் சென்றது ஏன்? பிரிந்த வரை ஒன்று சேரச் செய்து, அதன் பின்னர்ச் சாத்தனார் பெற்ற பயன் என்ன? பொன்னும் பொருளும் பெற்றாரோ? அரசன் குமணன் அரவணைப்பில் இருந்து அருமையெலாம் அடைந்தாரோ?

சாத்தனார் குடும்ப வறுமையை மறந்தார்; தாம் பரிசு பெற வந்ததையும் மறந்தார். உயர்வற உயர்ந்த கொள்கையிலே ஓங்கி நின்றார்.

மாறுபட்டு நின்றவர்களை ஒன்றுபடுத்தி உதவிய தற்காகத் தாம் ஒருபயனை நாடுவதாக இருந்தால் அதன் பொருள் என்ன! உழைப்புக்குப் பயன் ஆகும்; உதவிக்கு ஊதியம் ஆகும்; கால்நடைக்குக் கூலியாகும்; பயன் எதிர் பாராத பணியாகுமோ?

சாத்தனார் தம் புலமையை வாணிகமாக்க விரும்பினார் அல்லர். புலமை பொதுநலத்திற்கே பயன்பட வேண்டும் என முடிவு செய்தார். அதனால் வள்ளல் குமணன் வற்புறுத்தித் தந்தாலும் அதனை வாங்கிக் கொள்ளாத உள்ள நிறைவைப் பெற்றார்.

தலையும் தரமுந்திய வள்ளல் குமணன் கைப் பொருள் தருவதற்குத் தயங்குவனோ? மலையளவு குவிக்கவும் மனம் கொள்வான். ஆனால், சாத்தனார் உள்ளம் அப்பொருளை ஏற்பதற்கு இடம் தர வேண்டுமே!

பொருள் பெற்றுச் செல்ல வேண்டாத வளமை சாத்தனார்க்கு நேர்ந்துவிட்டதா? எப்படி நேரமுடியும்?

சாத்தனார் கோடை மலைக்குச் சென்றார். அம் மலையைக் கடிய நெடுவேட்டுவன் என்பான் ஆட்சி புரிந்து வந்தான். அவன் பெருவீரன். வேட்டையாடு வதில் தேர்ச்சி மிக்கவன். சுற்றத்தாரைப் போற்றிக் காப்பவன். அவனிடம் பரிசு பெற வேண்டிச் சென்றார்.

"மூவேந்தர்களே என்றாலும் சரி; எம்மை மதியாமல் கொடுக்கும் கொடையை மதியேம்; தகுதி அறிந்து மதித்துக் கொடுக்கும் கொடையையே பெறுவோம்" எனத் தம் தகைமையை எடுத்துரைத்தார் சாத்தனார். கடிய நெடுவேட்டுவன் விரைந்து பரிசு கொடுத்து அனுப்பாமல் காலம் தாழ்த்தினான். அதனை அறிந்தார். ஆயினும் அவனை விடுத்துச் செல்ல விரும்பினார் அல்லர்.

"கடலில் திரண்டு கூடிய மேகம் நீரை அள்ளிக் கொள்ளாமல் திரும்பாது. அதுபோல் பரிசில்பெற விரும்பியவர்கள் நீ தரும் யானைக் கொடையைப் பெறாமல் திரும்பார்" என்றார். பொருள் வேண்டிய நிலைமை இல்லையாயின் இவ்வாறு கூறியிருப்பாரா சாத்தனார்? அதற்காகப் பொருளே குறி என்று கருதியிருந்தாரானால் குமணனிடம் பரிசு பெறாமல் போயிருப்பாரா? குடும்பத்தில் வறுமை சூழ்ந்தாலும் கொள்கையில் வறுமை சூழாத வாழ்வுடையவர் சாத்தனார் என்பது தெளிவாம்.

ஈராயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் இன்றும் சாத்தனார் நமக்கு என்ன சொல்லுகிறார்?

"நிலை பெறா உலகத்தில் புகழால் நிலைபெறு" என்கிறார் அவர் புகழ் வாழ்க!

# அருள் வாழ்வு

## 1. பிறர்க்கென வாழும் பெருந்தகைமை

இந்த உலகம் எவரால் வாழ்கிறது? இந்த வினாவுக்குச் சுருக்கமாக விடை தந்துவிடலாம். வாழ வைப்பவர்கள் உலகில் வாழ்வதால் இந்த உலகம் வாழ்கிறது என்பதே விடை.

வாழவைப்பவர் எவர்? என மீண்டும் வினா வினால் திகைப்பே உண்டாகும். ஆனால், ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவு உடையவர்கள் அவ்வாறு திகைப்பது இல்லை. அதற்கும் விடைதருகின்றனர்.

நாம் உயிர் வாழ்வதற்கு உணவு வேண்டும். அவ்வுணவைத் தருபவர் எவர்? உழவர்! உழவரால் நமக்கு உணவு கிடைப்பதால் அவரால்தான் நாம் உயிர் வாழ்கிறோம். அதனால் அவர்களே வாழ வைப்ப வர்கள் என முடிவு செய்யலாம்.

ஆனால், உழவர்கள் மட்டும்தாம் உழைத்து உணவு தருகிறார்களா? அவர்களுக்காக உழைப்பவர் அவர்களுக்குத் துணையாக உழைப்பவர் இல்லாமல் அவர்கள் தொழில் நடைபெறுமா? தச்சரும், கொல்லரும் முதலாகிய தொழிலாளர்கள் உழைப்பு இல்லாமல் கலப்பையும், சாலும், வண்டியும், பிறவும் உழவர்க்குக் கிடைக்குமா? கிடைக்கமாட்டா. ஆதலால் உழைப்பாளர்களால் தான் உலகம் வாழ் கிறது என்று விரித்துக் கொள்ளலாம்.

இன்னும் பார்க்கலாம்!

ஒருவர் உழைக்கிறார்! நன்றாக உழைக்கிறார். ஆனால், அவர் உழைப்பின் பயன் அவரோடு நிற்கிறது, அல்லது குடும்ப அளவில் நின்று விடுகிறது. அவ் வுழைப்பாளரால் உலகம் வாழ்ந்து விடுமா?

தமக்கென்று அரும்பாடு படுபவரால் பிறர்க்கு ஆவது என்ன? பசி நோக்காது கண் உறங்காது பாடுபடுவதால் அவர் வீடு நிரம்பலாம்! மற்றவர் வாடுதல் நீங்குமா? ஆதலால், உழைப்பவர் நோக்கம் விரிவுற வேண்டும். விரிவது எப்படி?

பிறருக்காக உழைக்கிறோம் என்னும் பெருநிலை உண்டாக வேண்டும். அத்தகைய உள்ளம் உண்டாகிய வர்களால் தான் உலகம் வாழ்கிறது! வாழவும் போகிறது.

அவர்கள் தோன்றாவிட்டால் உலகம் அழிந்து போயிருக்குமா? அழியாது! மனிதர் வாழ்வுக்குத் தக்கதாக இவ்வுலகம் இருந்திருக்காது. காட்டிலே விலங்குள் உள்ளன அல்லவா! புள்ளிமான் புலிக்கு அஞ்ச, புலி அரிமாவுக்கு அஞ்ச, ஒன்றை ஒன்று கொல்ல! எப்பொழுதும் அச்சம்! எங்கும் அச்சம்! என வாழ்கின்றனவே, அவ் வாழ்வே இருந்திருக்கும்! தன் பெட்டை, தன் குட்டி என்ற அளவில் விலங்குகள் இருப்பதுபோலவே மனிதனும் இருந்திருப்பான்! அவ்விலங்குகள் தங்களுக்குள் தங்களையும், மற்ற வற்றையும் அழிப்பதுபோல அழித்து, அழிந்து கொண்டு வந்திருப்பர்! இவ்வளவு பெருகியிருக்கமாட்டார்! அன்பு, அமைதி, அறம் என்று பேசிக் கொண்டும், போற்றிக் கொண்டும் இருக்க மாட்டார்! ஆதலால்,

பிறர்க்கென வாழும் பெருந்தன்மையுடையவர்களால் தான் இந்த உலகம் வாழ்கிறது என்பது தெளிவாம்.

இக் கருத்தை நெடுங்காலத்திற்கு முன்னரே ஒருவர் உரைத்தார். அவர் இளமையிலேயே பேரறிவு படைத்தவராக விளங்கினார். பாண்டிய அரசராகவும் இருந்தார். அதனால் இளம் பெருவழுதி என்று அழைக்கப் பெற்றார். (வழுதி - பாண்டியன்) பின்னொரு நாள் அவர் கடலுள் கலஞ்செலுத்திச் சென்றனர் போலும்! அப்பொழுது ஏற்பட்ட இடையூறு ஒன்றால் கடலிலே மாய்ந்தார். அதனால், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எனப் பெயரிட்டு அழைத்தனர். (மாய்ந்த - இறந்த)

இளம்பெருவழுதி சொல்கிறார்:

***"உண்டால் அம்ம! இவ்வுலகம்***
***தமக்கென முயலா நோன்தாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"***

"தமக்கென முயற்சி செய்யாமல் பிறருக்கென முயற்சி செய்பவர் இருப்பதால் இவ்வுலகம் நிலைபெறுகிறது" என்பது இளம் பெருவழுதி கூறும் செய்தியாகும். நமக்கு என்ன சொல்கிறார் வழுதி?

***"முடங்கிக் கிடவாதே!"***

***"முயற்சியாளனாக இரு!"***

***"தனக்காக வாழாதே!"***

***"பிறருக்காக வாழ்க!"***

என்பவை வழுதி நமக்குச் கூறுபவையாம்.

## 2. கற்றல் நன்றே

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்பர். ஆம்! கல்விப் பொருளே மெய்ப்பொருள்! அழியாப் பொருள்! நம்மை என்றும் பிரியாப் பொருள்! உயிரோடு உள்ள காலத்திலும் இரவு, பகல், இளமை, முதுமை, வறுமை, வாழ்வு என்று இல்லாமல் எப்பொழுதும் நம்முடன் இருக்கும் பொருள் கல்வியே. இறந்த பின்னரும் நாம் இவ்வுலகில் இருந்ததற்கு அடையாளமாக இருக்கும் பொருள் கல்வியே ஆகும்.

"உடலுக்கு அழிவு உண்டு. ஆனால், உயிருக்கு என்றும் அழிவு இல்லை. ஆதலால், அவ்வுயிர் உடலை விட்டு, நீங்கும் பொழுதில் அவ்வுயிருடன் நாம் வருந்தித் தேடி வைத்த செல்வம் எதுவும் தொடர்ந்து போகாது; முயன்று கற்றுக் கொண்ட கல்வியே விடாது முழுமை யாகத் தொடரும்" என்பது நம் முன்னோர் கண் டுணர்ந்த மெய்ப்பொருளாகும்.

மனம்போன போக்கில் நம்மைப் போகவிடாமல் மறித்துத் தடுப்பது கல்வியே ஆகும். உலகியல் எவ்வாறு உள்ளது என்பதை உணர்ந்து நடக்க வழி காட்டுவது கல்வியே ஆகும். இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் அறிந்து, எதிர்காலத்தை உணர்ந்து கொள்ளச் செய்வதும் இக் கல்வி அறிவேயாகும். அதனால்தான், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார் திருவள்ளுவர்.

எவ்வளவு பொருளை ஒருவன் தேடி வைத்திருந் தாலும் அறிவில்லாத ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. அப்பொருளையும் காத்துக் கொள்ள முடியாது. எத்தனை கோட்டைகளையும் படைகளையும் வைத்திருந்தாலும் அறிவில்லாத ஒருவன் அவற்றால் அச்சம் இல்லாமல் இருக்க முடியாது. அறிவில்லாத ஒருவனைக் கெடுப்பதற்குப் பகைவர் எவரும் வேண்டும் என்பது இல்லை. அவனிடமுள்ள அறியாமையே அவனைக் கெடுத்துவிடும். இவற்றால் கல்வியறிவின் சிறப்புப் புலப்படும்.

மேலும் பொருட்செல்வம் நீருக்கும் நெருப்புக்கும் இரையாகி ஒழியும். மண்ணுக்குள் புதையுண்டு மடியும். கள்வர் கைப்பட்டும் தொலையும். ஆனால், கல்விச் செல்வம் அவ்வகைகளால் அழிந்து படுதல் இல்லை.

பொருட்செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும் தன்மையுடையது. ஆனால், கல்விச் செல்வம் கொடுக்கக் கொடுக்கப் பன்மடங்காக மிகும். கொடுப் பவனுக்கு மிகும்! வாங்குபவனுக்கும் மிகும்! வீடு களிலே ஊற்றுப் பெருக்குப்போல் பெருகி, நாட்டிலே வெள்ளப்பெருக்குப் போல் மிகும். பள்ளத்தில் கிடப்போரெல்லாம் மேட்டில் ஏறி நிற்கும் உயர்நிலை உண்டாகும்.

இன்னும் ஆராய்ந்தால் கல்வியின் சிறப்பு மேலும் புலப்படும். தாய் தன் மக்களிடம் வேற்றுமை இல்லாத அன்பு செலுத்தும் பெருங்குணம் உடையவள். அவள் இயற்கைத் தன்மை அதுவேயாம்! ஆனால், ஒத்த அன்பு செலுத்தும் அத்தாயும் கல்வியில் சிறந்து நிற்கும் மகனிடத்தோ, மகளிடத்தோ பேரன்பு கொள்ளத் தூண்டும்! பிறருக்கு இல்லாத பெருமையைத் தாயி

னிடம் இருந்து பெறச் செய்யும் அளவில் நிற்பதோ கல்வி?

அறிவுடைய பெரியவர்கள் அனைவரும் அறிவுடையவனையே மதிப்பர்; அவனையே அரவணைத்து அளவளாவுவர். நாடாளும் பெருந்தலைவனும் ஒன்றை ஆராய வேண்டும் என எண்ணினால் வயதால் மூத்தவனை வருக என்று அழைக்காமல் அறிவால் முதிர்ந்தவனையே அழைத்துப் பேசுவான். அவன் சொன்ன சொற்களைப் பொன்னேபோல் போற்றிக் கொள்வான். வயதின் இளமை முதுமையைக் கடந்து பெருமை தருவது கல்வி அல்லவா!

ஒரு குடும்பத்திற்குப் புகழ் எவ்வாறு உண்டாகின்றது? அறிவுடையவர் பிறந்த குடும்பமே அனைவர் புகழுக்கும் உரிய குடும்பம் ஆகின்றது. அறிவுடையவன் தாழ்ந்த குடியில் பிறந்தாலும், அவன் பிறந்தமையால் அக்குடி உயர்ந்த குடியினர் பாராட்டும் பெருமை அடைகின்றது. சேற்றிலே பிறந்தாலும் செந்தாமரைக்கு எவ்வளவு சிறப்பு? நத்தையிலே பிறந்தாலும் முத்துக்கு எத்தகைய மதிப்பு?

அறிவில்லாதவன், உயர்ந்த குடியிலே பிறந்திருந்தாலும் அதற்காக அவனை எவரும் மதியார். நென்மணியுடன் பிறந்திருந்தாலும் பதரை எவராவது பாராட்டுவாரா? தலையிலே பிறந்து வளர்ந்ததற்காகப் பேனை எவராவது பெருமைப் படுத்துவாரா?

பெருகி வரும் வெள்ளத்தைக் கடக்க விரும்பும் ஒருவன், படகைச் செலுத்துபவன் எக்குடியில் பிறந்தவன் என்றோ, எவ்வினத்தவன் என்றோ எண்ணிப் பாரான். அவன் துணைக்கொண்டே வெள்ளத்தைக்

கடப்பான். அதுபோல் அறிவுடையவன் பிறந்த குடியை நோக்காமல் அவன் அறிவுச் சிறப்பையே நோக்கி அனைவரும் அவனிடம் வருவர். அதனால் குல ஏற்றத் தாழ்வை ஒழிக்க வல்லது கல்வியே ஆகும்.

இக்கல்விச் சிறப்பை நெடுங்காலத்திற்கு முன்னரே நன்கு உணர்ந்தான் ஒருவன். அவன் செல்வர்க் கெல்லாம் செல்வன். செல்வச் சிறப்புப் போலவே வீரப் பெருமையும் உடையவன். 'நேர்மைக்கு ஒருவன் என்று நல்லோர் நெஞ்சங்களில் எல்லாம் உறைபவன் அவன், பாண்டியன் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் என்பவன். மன்னனாக இருந்தாலும் சங்கச் சான்றோர் களுள் ஒருவனாக விளங்கியவன்.

அவன் சொல்கின்றான்:

> ***"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்***
> ***பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"***

எப்படிக் கற்க வேண்டும் என்கிறான் பாண்டியன். சிறப்புமிக்க கல்வியைச் செம்மையாக ஒருவன் பெற வேண்டுமானால், "சீரான முறைப்படி நடந்து ,பெற வேண்டும்" என்று திட்டமிட்டு, முறை வகுத்துக் கூறுகின்றான். மன்னன் வகுத்த வழியே மக்கள் வழியாக இருந்தது அக் காலம். ஆதலால்,

ஆசிரியர்க்கு உதவுதல் மாணவர்களின் 'தலையாய' கடமையாகும். மாணவர்க்காகவே தம் வாழ்வை ஒப்படைத்துக் கொண்டவர் ஆசிரியர். ஆதலால் அவருக்காக வாழ்வது மாணவர் கடமை என்பதைச் சொல்ல வேண்டியது இல்லை. அவருக்கு நோய்த்துயர் உண்டாகலாம். அறியாதவர் வழியாக அல்லல்களும், நேரிடலாம். அப் பொழுதுகளில்

ஆசிரியர்க்கு அவர் மக்கள் போல இருந்து செய்யத்தக்க உதவிகளைச் செய்தல் மாணவர் கடமை. இவ்வாறு உதவுதல் "உற்றுழி உதவுதல்" என்பதாம்.

இந் நாளைப்போல் அந் நாளில் ஆசிரியர்க்குச் சம்பளத்தை அரசு வழங்கவில்லை. படிக்கும் மாணவர் களின் பெற்றோர்களே ஆசிரியர்க்கு வேண்டிய வீடு, உணவு, உடை, முதலியவற்றை உதவினர். மற்றவர்கள் அவரவர் செய்யும் தொழிலால் பொருள் ஈட்டுகின் றனர். அதனால் வாழ்கை நடத்துகின்றனர். பொருள் இல்லாமல் எவருக்கும் வாழ்க்கை நடத்த இயலாது. ஆதலால், ஆசிரியர்க்கு வேண்டிய பொருளைக் கற்பவர்கள் தரவேண்டியது முறைமை தானே! ஆசிரியரையைப் பட்டினி போட்டுப் பாடம் கற்க முடியுமா? ஆதலால், "உறுபொருள் கொடுத்தும்" என்றான். உறுபொருள்-மிகுந்த பொருள்.

இவ்விரண்டு கடமைகளும் இன்றியமை யாதனவே. ஆயினும், இவற்றினும் சிறந்த கடமை ஒன்று உண்டு. முழுநிறை கல்வியைப் பெற விரும்பும் ஒருவன் ஆசிரியர் அன்பைப் பெற வேண்டும் அல்லவா! அந்த அன்பைப் பெறுவதற்கு வழி 'பிற்றை நிலை முனியாது கற்றல்' என்பதாம்.

ஆசிரியரைக் கண் கண்ட கடவுளாகக் கருத வேண்டும். அவர் மனம் மகிழுமாறு பணிவுடன் நடக்க வேண்டும். அடக்கம் ஒடுக்கம் உடையவனாக விளங்க வேண்டும். அன்பு மனமும், இனிய மொழியும், செவ்விய ஒழுக்கமும் உடையவனாக இருக்கவேண்டும். ஆசிரியர்க்கு எவ்வகையிலும் வருத்தம் வாராவண்ணம் நடந்து கொள்ள வேண்டும். அவர் சில வேளைகளில் சினங்கொண்டு சுடுசொற்களைச் சொன்னாலும்,

ஒரொரு வேளை அடித்தாலும் நம் நன்மையைக் கருதியே அவற்றைச் செய்தார் என்று எண்ணிக் கோணாமல் நடக்க வேண்டும். அவர் பாராட்டிப் புகழும்வண்ணம் படிப்பில் முதன்மையாக விளங்க வேண்டும். இவற்றை எல்லாம் அடக்கியே, "பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்றான்.

ஆசிரியரின் எதிரே நிற்காமல் பக்கமாக நின்று வாய்பொத்தி அமைந்து பாடம் கேட்பது அந்நாள் வழக்கம். ஆதலின், அம் முறையில் வெறுப்புக் கொள்ளாது கற்றல் நன்றே என்றான் என்க.

கொட்டும் தேனீயிடம் கூடப் பக்குவமாக நடந்து தேனை எடுப்பதைக் காண்கிறோம் அல்லவா! அவ்வாறாக, அறிவறிந்த ஆசிரியரிடம் அமைந்து நடந்து கல்வி என்னும் கணிக்க முடியாச் செல்வத்தைத் தேடிக் கொள்ளல் கடினமாகுமோ?

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தில் இருந்த கல்வி முறைக்கும் இன்றைய கல்வி முறைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. இக் காலநிலையில் முன்னிரண்டு கடமைகளைப் பற்றிக் கூட மாணவர் அக்கறை கொள்ளவேண்டுவது இல்லை. ஆனால், பின்னே கூறிய ஒன்றைக் கட்டாயம் போற்றுதல் வேண்டும்.

> ***"ஆசிரியர்க்குப் பணிந்து நடத்தல்***
> ***ஆசிரியர் விரும்புமாறு அமைந்து நடத்தல்***
> ***ஆசிரியர் பாராட்டுமாறு தேர்ச்சி பெறுதல்***
> ***ஆசிரியர் சொல்வழி நின்று உயர்தல்"***

என்பவற்றை மாணவர் கைக்கொண்டால் அவர்கள் வாழ்வு ஏற்றமுடையதாகும். ஒளிமயமான உலகும் உண்டாகும்.

## 3. நாடு போற்றும் நல்லரசு

"இஃது எங்கள் நாடு. இந் நாட்டின் வாழ்வே எங்கள் வாழ்வு" என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும். இந் நாட்டு மக்களுக்குப் பணி செய்வதற்காகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளேன். இந் நாட்டின் மக்களே இந்நாட்டின் செல்வம்! அவர்கள் அடையும் மகிழ்ச்சியே நான் அடையும் மகிழ்ச்சி என்று எண்ணுவோன் அரசு நடத்துபவனாக இருக்க வேண்டும். அவ்வாறு அமைவதே நல்ல நாடு ஆகும்.

அரசு எதனால் நடக்கிறது?

மக்கள் தரும் வரிப்பணத்தால் அரசு நடக்கிறது.

மக்கள் வாழ்வில் எப்பொழுது அமைதி உண்டாகும்?

மக்களுக்கு வேண்டும் நலங்களைப் பால் நினைந் தூட்டும் தாய்போல அரசு எண்ணி எண்ணி உரிய பொழுதில் நலங்களைச் செய்தால் மக்கள் வாழ்வில் அமைதி உண்டாகும். அந்த நாட்டுக்காக எந்தக் கடமையைச் செய்யவும் மக்கள் துணிந்து நிற்பர். மக்கள் நலம் கருதாத ஆட்சியை மக்களும் கருதார். அதனை மாற்றி அமைக்கவும் கருதுவர்.

மக்கள் அரசுக்குச் சேர வேண்டிய வரியைச் செலுத்தாமல் மறைப்பும், ஏய்ப்பும் செய்யலாமா?

அவ்வாறு செய்வது நாட்டைக் கெடுக்கும் பகைவர் செயலினும் கொடுஞ்செயலாகும். குடிக்கும் கூழுக்கும் உடுக்கும் கந்தைக்கும் வழியற்றுப் பாடுபட்டுத் தேடித் தந்த ஏழையரின் வரிப் பொருளை அரசு பாழுக்கு இறைக்கலாமா? அவ்வாறு இறைப்பது, அணுகுண்டு போட்டு நாட்டை அழிக்கும் கொடுமையினும் பெருங் கொடுமையாகும். ஆதலால், உரிய வரியை ஒளிக்காமல் செலுத்தும் மக்களும், வாங்கும் வரியை, வழங்கிய மக்கள் வாழ்வுக்கே செலவிடும் அரசும் உடையதே நல்ல நாடு! நானிலம் போற்றும் நாடு.

சில பசுக்கன்றுகள் எலும்பும் தோலுமாக இருக்கக் காண்கிறோம்! ஏன்?

கன்றுக்குச் சிறிதளவும் பால் விடாமல் இரக்கம் என்பது எள்ளளவும் இல்லாமல் கறந்து விடுகின்றனர். அக் கன்று தள்ளாடித் தள்ளாடிச் சிலகாலம் திரியும். பின்னர் உயிரைத் தாங்கமாட்டாமல் இறந்து போகும். அப்பொழுதும் விடுவது உண்டா? அக் கன்றின் தோலை உரித்து வைக்கோலைத் திணித்துக் கன்றாகப் பசுவுக்குக் காட்டிக் கறப்பர்! கொடுமையான - கண்ணால் காணப் பொறுக்காத - காட்சி இது. இரக்கமின்றி வரியைக் கறக்கும் நாட்டின் மக்கள் நிலைமையும் அக் கன்றின் நிலைமையேதான்!

இனிச், சில கன்றுகள் கொழுத்துப்போய்த் திரியக் காணலாம். அவை அளவின்றிப் பால் குடித்தவை. பசு, தனக்குத் தீனி தந்தவனுக்குப் பாலைத் தராமல் ஏறக் கட்டிக் கொள்ளும். கறக்கக் கை வைத்தால் போதும்; பாலை ஏற்றி மடுவில் வைத்துக் கொள்ளும். பாலைச் சிறிது கறந்துகொண்டு பால் இல்லை என்று கன்றை விட்டால் போதும்! உடனே

கட்டி வைத்திருந்த பாலையெல்லாம் கன்றுக்குக் கொட்டித் தீர்த்துவிடும்! திருட்டுப்பால் குடித்த கன்று கொழுத்துத் திரிவதில் வியப்பு உண்டா? இவ்வாறு அரசுக்குச் சேரும் வரியை ஏய்த்து வாழ்பவர் பொருள் பெருகி வாழலாம்! ஆனால், நாட்டுக்குப் புற்றுநோய் போன்றவர் அவர் என்பது உண்மை!

அரசு என்பதே எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே வரி வாங்குவதும் தோன்றிவிட்டது. சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோருள் ஒருவர் பிசிராந்தையார். அவர் அறிவுடைநம்பி என்னும் பாண்டியனைப் பார்த்து, வேந்தர் வரி வாங்கவேண்டிய முறைமையை அருமையாக வலியுறுத்திக் கூறினார். அரசன் அறிவுடைநம்பி. ஆதலால் புலவர் உரையைப் பொன்போலப் போற்றி ஏற்றுக்கொண்டான். புலவர் அவனிடம் என்ன சொன்னார்?

“விளைந்த நெல்லை அறுத்து அரிசியாக்கிச் சமைத்துக் கவளம் கவளமாக உருட்டி யானைக்குத் தருவதானால் சிறு நிலத்தில் விளைந்த நெல்கூட யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும். ஆனால், அவ்வாறு செய்யாமல் விளைந்த நெல்வயலில் யானையைத் தன் போக்கில் போய் மேயவிடுவதானால் என்ன ஆகும்? நூற்றுக்கணக்கான வயல்களாக இருந் தாலும் யானை அழித்துப்போடாதா? ஒரே பொழுதில் யானை வாய்க்குள் போகும் உணவைப் பார்க்கிலும், அதன் கால்களுக்கு இடையே பட்டு மிதியுண்டு அழியும் அளவுக்குக் கணக்கு உண்டா?” என்று பாண்டியனுக்கு ஒரு காட்சியை எடுத்துக் காட்டினார் பிசிராந்தையார்.

அதனை அழகாக எண்ணினான் அரசன். எடுத்துரைத்த காட்சியைத் தொடுத்தார் பிசிராந்தையார். **“அறிவுடைய வேந்தன் வரிகொள்ளும் முறைமையை அறிந்து குடிகளிடம் வாங்கினால் அவன் நாடு கோடிக்கணக்கான பொருளைத் தேடித்தந்து தானும் வளம்பெறும்”** என்றார்.

புலவர் கருத்தில் தன்னை மறந்து போனான் பாண்டியன். தன் நாட்டில் உள்ள ஆட்சித் தலைவர்களால் ஏதேனும் கேடு நாட்டுக்கு ஏற்பட்டு இருக்குமோ எனத் திகைப்படைந்தான். அப்பொழுது புலவர், “அரசன் அறிவில் குறைந்தவனாக இருந்து, நாள்தோறும் தரமறியாத கூட்டத்தவரோடு கூடிச் சேர்ந்து, இரக்கமில்லாமல் குடிகளிடம் வரிப்பொருள் கொள்ள விரும்பினால் யானை புகுந்து மேய்ந்த வயலைப் போலத் தானும் நன்மையடையான். நாட்டுக்கும் நன்மை வாராது” என்று கூறி முடித்தார்.

> ***“அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே***
> ***கோடி யாத்து நாடுபெரிது நந்தும்”***

என்று புலவர் கூறிய வரிகள் அவனை வயப்படுத்தின! அதனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டான்.

ஆட்சித் தலைவன் செம்மையானவனாக இருந்தால் போதுமா, அவனைச் சார்ந்தவர்கள் கேடராக இருந்தால்? அவர்கள் செய்யும் கேடுகள் எல்லாம் யாரைச் சேரும்? ஆட்சித் தலைவனையே சேரும். தான் செம்மையாக இருப்பதுடன் தன்னைச் சார்ந்த அரசியல் சுற்றத்தாரும் செம்மையாக நடந்து கொள்ளப் பார்க்க வேண்டியதும் அவன் கடமையே யாம்.

ஓர் அரசன் கருவூலத்தில் பொருளே இல்லை. ஆனால், குடிகள் கொடுமைப்படுத்தி வரி வாங்கப் படுவதாக முறையிட்டனர். அரசனுக்கு எதுவும் புலப் படவில்லை. குடிமக்கள் வரி செலுத்தவில்லை என்றே எண்ணிக் கொண்டு இருக்கிறான் அவன். அவ்வரசன் அவைக்கு ஒரு பெரியவர் வந்தார். உண்மையை அரசனுக்கு உரைக்க விரும்பினார். வெளிப்படச் செய்வதைப் பார்க்கிலும் அரசனே குறிப்பால் அறிந்துகொள்ளச் செய்வது நல்லது என நினைத்தார்.

அரசர்க்கு இரண்டு பக்கங்களிலும் அதிகாரிகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். கடைசியில் இருந்த ஒருவரிடம் ஒரு தட்டில் பெரிய பனிக்கட்டி ஒன்றைத் தந்தார். அதை ஒவ்வொருவர் கை வழியாகவும் அரச ரிடம் சேர்க்குமாறு கூறினார். அவ்வாறே செய்தனர். அரசன் கைக்குப் பனிக்கட்டி வந்தபோது கரைந்தே போய்விட்டது! குடிகளிடம் வாங்கும் வரிப்பணம் தன்னிடம் வருமுன் எப்படிக் கரைகிறது என்பதைக் கண்டு தெளிவடைந்தான். தானாகத் தெரிந்து கொள்ள முடியாவிடினும், உண்மை தெரிந்தவர் உரையையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லவா!

மக்கள் தாங்கும் ஆற்றலுக்கு மேற்பட்ட அளவில் வரி வாங்குவதை - அவ்வாறு வரி வாங்கி நாட்டுக்கு நன்மை செய்வதாகக் கூறுவதை - நாலடியார் ஓர் உவமையால் நன்கு விளக்குகின்றது.

“மயிலின் கொண்டையை அறுத்து அதற்கு ஊட்டுவது போன்றது, துன்புறுத்தி வரி வாங்கி அவர்க்கு நன்மை செய்தாகக் கூறுவது” என்பது அது.

உண்மைதானே! நாள்தோறும் பொன் முட்டை இடும் வாத்தை வளர்ப்பவன், ஒரேநாளில் அவ்வளவு முட்டைகளையும் எடுத்துவிட வேண்டும் என்று அதன் வயிற்றைக் கிழித்தால் என்ன கிடைக்கும்? அன்று இடும் முட்டை ஒன்றுதானே கிடைக்கும்! அறிவுடையவன் இத்தகைய செயலைச் செய்வானா? அதனால்தான்,

> ***"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே***
> ***கோடி யாத்து நாடுபெரிது நந்தும்"***

என்று முழங்கினார் பிசிராந்தையார்.

# 4. வண்டியோட்டும் வகை

*"வண்டி அற்புதப் பொருளாம் - வண்டி*
*மாடும் அற்புதப் பொருளாம்*
*வண்டி பூட்டும் களிறும் - என்றன்*
*மனத்துக் கற்புதப் பொருளாம்"*

என்று பாடினார் **கவிமணி**. புலமையாளர் பார்வையிலே எல்லாப் பொருள்களும் புதுமையாகவும் விந்தையானவையாகவும் தோன்றுகின்றன. மற்றவர் காணாத காட்சிகளையெல்லாம் காண்கிறார்கள். மற்றவர் அறியாத கருத்துக்களையெல்லாம் அறிகின்றார்கள்.

"ஒருவன் உருவத்தைக் கண்டு இகழாது இருக்க வேண்டும். ஓடும் தேருக்கு அச்சாணி எவ்வளவு இன்றியமையாதது? அவ்வச்சாணி போன்றவர்களாகவும் அவர்கள் இருக்கக்கூடும்" என்று கூறினார் **திருவள்ளுவர்**.

அவரே, "மயில்தோகையே என்றாலும் அளவுக்கு மேல் வண்டியில் ஏற்றினால் வண்டியின் வலிய அச்சும் முறிந்துபோகும் என்று கூறுமுகத்தான் வலிய வேந்தராக இருந்தாலும், மெலிய பகைவர் பலரைத் தேடிக் கொள்வார் ஆயின் அழிந்துபோவார்" என்னும் கருத்தை விளக்கினார்.

"வண்டிச்சக்கரம் சுற்றிக்கொண்டு வருவது போலச் செல்வமும் ஓரிடத்து நில்லாது சுழல்கிறது" என்றார் ஒருவர்.

"அன்புடைய கணவனும் மனைவியும் வண்டியில் பூட்டப்பெற்ற இரண்டு காளைகளைப்போல் ஒன்று பட்டுச் செல்லவேண்டும். அவ்வாறு சென்றால் இல்லறம் என்னும் வண்டி தடையின்றிச் செல்லும்" என்றார் இன்னொருவர்.

சேற்றில் பதிந்த வண்டியை முயன்று இழுக்கும் காளை, பெருமூச்சு விடுவதுபோல ஒருவர் பெருமூச்சு விடுவதைக் குறிக்கிறார் வேறொருவர்.

"வலிய காளை போன்ற முயற்சியாளர்களை வருத்த வந்த துன்பமே துன்பப்பட்டுப் போகும்" என்றும் சான்றோர் குறித்தனர். இவ்வகையில், ஆட்சி செய்வதை வண்டியோட்டுதலுடன் ஒப்பிட்டுக் கூறி னான் ஒரு வேந்தன். ஆட்சியைத் தெளிவாக அறிந்தவன் கூறியது ஆகலின் இன்றைக்கும் மிக ஏற்றதாக அமைந்துள்ளது. அவ்வரசன் **தொண்டைமான் இளந்திரையன்** என்பவன் ஆவான்.

மாட்டு வண்டியையோ, குதிரை வண்டியையோ பாருங்கள். இரும்பினால் ஆகிய வலிய அச்சு; அச்சுச் சுழலும் குடம்; குடத்தைச் சுற்றி அமைந்த வட்டக் கட்டை ஆரக்கால்; அக்கட்டை அகலாமல் இருக்க வும் தேயாமல் இருக்கவும் அமைந்த ஆரக்கால் வட்டக் கட்டை; அக்காலைச் சுற்றி வட்டமாக அமைந்த பட்டை. இவ்வெல்லாம் கூடிய தாங்கு கட்டை; அதன்மேல் அமைந்த நீள்மரம்; அதன்மேல் அமைந்த பார். அச்சினை விட்டு உருளை அகலாமல் இருக்க அமைந்த அச்சாணி. வண்டியை ஓட்டுபவன் இருக்க இருப்புச்சட்டம்; மாடு பூட்டுவதற்கு நுகக்கோல்; நுகக்கோலுடன் மாட்டை இணைக்கும் பட்டறைவார்

அல்லது தும்புக்கயிறு; மாடு நுகக்கோலை விட்டு அகலாமல் இருத்தற்கு அமைந்த கடையாணிக்குச்சி, நெடுங்கட்டையை நிலத்தில் படாமல் வைக்க உதவும் குரங்குக்கட்டை, பாரம் பின்னே கூடிவிட்டால் வாரிக் கொட்டாமல் காக்க உதவும் முட்டுக்கம்பு அல்லது தாங்கி! இன்னும் ஆணிகள், முளைகள், சட்டங்கள்! இவ்வளவும் கூடியதல்லவா வண்டி! இவ் வண்டியில் அமைந்த உறுப்புகள் எல்லாம் சரியாக இருந்தால் தானே வண்டி ஓடும்?

"அச்சாணி இல்லாத வண்டி முச்சாணும் ஓடாது" என்பது பழமொழி. அதுபோலச் சக்கரம் இல்லாமல், மற்ற உறுப்புகள் இல்லாமல் வண்டி ஓடுமா? பாரம் தாங்குமா?

அரசிலும் எத்தனை உறுப்புகள்? நிதி, நீதி, கல்வி, மருத்துவம், பொதுப்பணி, தொழில், சட்டம் இப்படி எத்தனை எத்தனை துறைகள்! அவற்றின் உள்துறைகள் எத்தனை? இவையெல்லாம் செம்மையாக அமையா விட்டால் அரசியல் என்னும் வண்டி சரியாக இயங்குமா?

வண்டி நன்றாக அமைந்தாலும் அதனை இழுக்கும் உயிரியோ ஆற்றலோ வேண்டுமே! அவை இருந்தாலும் திறமையோடு இயக்குபவனும் வேண்டுமே! இவ்வளவும் ஒருங்கே கூடினால் அல்லவா, வண்டி சரியான வழியில் செல்லும்! இவற்றையெல்லாம் எண்ணுகின்றான் இளந்திரையன். அதன்பின் தன் கருத்தை உரைக்கின்றான்.

"உருளையையும் பாரையும் கோத்து உலகில் செலுத்தும் வண்டி, அதனைச் செலுத்துவோன்

திறமையுடையவனாக இருப்பின் எத்தகைய இடையூறும் இல்லாமல் வழியில் இனிதாகச் செல்லும். அவ்வாறு திறமையாகச் செலுத்தும் ஆற்றல் அவனுக்கு இல்லையானால் நாள்தோறும் சேற்றிலே பட்டுத் துன்புறும்" என்றான். வண்டியைக் கூறும் வகையால் ஆட்சியை நினைவுபடுத்தினான் இளந் திரையன்.

"வண்டி செலுத்துபவனைப் போல் வையகத்தைச் செலுத்துவபவனும் திறமையுடையவனாக இருந்தால் எத்தகைய இடையூறும் இல்லாமல் ஆட்சி இனிதாக நடைபெறும். திறமை இல்லாதவனாக இருப்பான் ஆனால் உட்பகை, வெளிப்பகை ஆகிய சேறுகளின் இடையே பட்டு அரசியல் வண்டியும் ஆழ்ந்து அல்லலுக்கு உள்ளாகும்" என்று குறிப்பிட்டான்.

***"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்***
***காவல் சாகாடு உகைப்போன் மாணின்***
***ஊறின்று ஆகி ஆறினிது படுமே"***

என்பது அவன் வாக்கு. (கால் - சக்கரம், ஞாலம் - உலகம்; காவல் சாகாடு - அரசியலாகிய வண்டி; உகைப்போன் - செலுத்துவோன்; மாணின் - மாண்பு உடையவன் ஆயின்; ஊறு - இடையூறு; ஆறு - வழி.)

வண்டியும் நல்ல வண்டி! மாடும் திறமையான மாடு! ஆனால் செலுத்துவோன் திறமை இல்லாதவன்! வண்டி வழிப்படியே போகுமா? வழிப்படுத்தி இயக்க வேண்டியவன் வண்டியோட்டி அல்லவா! அவனுக்கு அத் திறமை இல்லாவிடின் மேட்டிலோ, பள்ளத் திலோ, சேற்றிலோ, மணலிலோ எதிரே வருபவற்றின் மேலோபட்டு வண்டியும் கெடும்! மாடும் அழியும்! அவனும் பிழைக்கமாட்டான்!

*"வண்டி, ஓட்டை வண்டி!*
*வண்டி மாடும் சண்டி!*
*வண்டிக் காரன் நொண்டி!*

என்று இருந்தால் வண்டியின் ஓட்டம் எப்படி இருக்கும்?

நாடும் நன்றாக இருக்கவேண்டும், அதிகாரிகளும் நன்றாக இருக்கவேண்டும். ஆள்பவரும் நன்றாக இருக்கவேண்டும். அவ்வாறு அமைந்தால் அந்நாட்டுக்கு இணையே இல்லை. இம் மூன்றும் முதன்மை யானவையே! முக்காலிக்கு உரிய கால்களில் எந்தக்கால் முதன்மையானது? எல்லாம் முதன்மையானவையே என்றாலும் நாட்டு மக்களையும், அதிகாரிகளையும் வழிப்படுத்த வேண்டிய கடமை ஆள்பவர்க்கே உண்டு. அவர் சரியாக அமையாவிடின் யாரைத் தட்டிக் கேட்க முடியும்? சுட்டிக்காட்ட முடியும்? அதனால்தான் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த இளந்திரையன், "ஆள்பவன் செம்மையாக இருந்தால்தான் ஆட்சி சரியாக நடக்கும்" என்று அறுதியிட்டு உரைத்தான்.

மன்னர் ஆட்சிக்காலத்திலே மன்னனே உரைத்த மொழி இது. இப்பொழுது மன்னர் ஆட்சி மக்களாட்சி யாக மாறிவிட்டது. ஆனாலும் அவன் அருளிய அறவுரை இன்றும் பொருந்துவதாகவே உள்ளது. அரசர் இருந்த இடத்தில் அமைச்சர்கள் உள்ளனர்; அவ்வளவுதான் வேறுபாடு! அடிப்படை அறம் முக்காலத்திற்கும் ஒத்ததுதானே! நாளைக்கு ஒன்று என்று சட்டம் வரலாம்! அவ்வாறு நாளும் பொழுதும் மாறுவது அன்று அறம்! வள்ளுவர் கூறிய வாய்மையும், இன்னா செய்யாமையும் ஈராயிரம் ஆண்டுகள் சென்ற பின்னர் காந்தியடிகளார் உருவில் திருவுலாக் கொள்ள வில்லையா?

# 5. எது நல்ல நிலம்?

இவ் வினாவைக் கேட்டதும் மிகுதியான விளைவு தரும் நிலம் எதுவோ அதுவே நல்ல நிலம் என்று கூறுவர். மிகுதியான விளைவு - பயன் - தரும் நிலம் எந்த நிலம்?

அகிலும் தேக்கும் அழியா நிலம்; வேங்கையும் கோங்கும் விரவும் நிலம்; சாந்தும் தேனும் தரும் நிலம். ஏலமும் மிளகும் ஏந்தும் நிலம்; அருவியும் ஆறும் ஒழுகும் நிலம்; "இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்னும் சிறப்புடைய யானை வாழும் நிலம்; மக்களினம் முதன்முதல் தோற்றத்திற்கு இடமாக இருந்த நிலம் - குறிஞ்சிநிலம்! அது நல்ல நிலம் இல்லையா?

கொன்றையும் குருந்தும் கொஞ்சும் நிலம்; தினையும் சாமையும் திகழும் நிலம்; வான்மழை கொண்டு வளந்தரும் நிலம்; கானாங்கோழியும் முயலும் உறையும் நிலம்; புறாவும் கிள்ளையும் புகுநிலம்; ஆடும் மாடும் வளர்த்து அறங்கொழிக்கு நிலம்; பவழவாய் திறந்து குழலூதும் கண்ணன் கோயில் கொண்ட நிலம் - முல்லை நிலம்! அது நல்ல நிலம் இல்லையா?

நெல்லும் கரும்பும் நிறையும் நிலம்; வாழையும் கமுகும் வளரும் நிலம்; கிழங்கும் கீரையும் கிடைக்கும் நிலம்; ஆறும் ஊற்றும், ஏரியும் குளமும் எங்கும்

காணும் நிலம்; உழவும் தொழிலும் ஓங்கும் நிலம். வளமும் வாழ்வும் சிறக்கும் நிலம்; தேரும் திருவிழாவும் திகழும் நிலம்; ஊரும் நகரும் பெருகும் நிலம்; நாகரிகத்தின் வித்தாக நவிலும் நிலம்; மருத நிலம்! அது நல்ல நிலம் இல்லையா?

கடலும் கானலும் கலந்த நிலம்; தாழையும் தென்னையும் தழைக்கும் நிலம்; உப்பும் மீனும் ஓங்கும் நிலம்; ஓடமும் கப்பலும் உலாவும் நிலம்; ஆழங் காணா அரிய நிலம்; எண்ணா வளங்களை ஏந்து நிலம்; முத்தும் பவழமும் முதிரும் நிலம்; உலகச் சந்தைக்கு ஒரு வழியாக அமையும் நிலம்; பரதவர் உறையும் பழைமை நிலம்; நெய்தல் நிலம்! அது நல்ல நிலம் இல்லையா?

ஆம்; இவை எல்லாம் நல்ல நிலங்கள் இல்லையா-

கல்லும் கரடுமாகக் காட்சி அளித்தாலும் தங்கக் கட்டியைத் தன்னுள்ளே வைத்துக்கொண்டு முயற்சி யாளன் கையிலே மின்னலிடுகின்றதே ஒரு நிலம்-

மணற் பரப்பாகவே தோன்றினாலும் இரேடியத் திற்கு மூலப்பொருளாகிய யுரேனியத்தைத் தன் னிடத்தே பரப்பி வைத்துக்கொண்டு தன் பக்கம் உலகப் பார்வையைத் திருப்ப ஒளி செய்கின்றதே ஒரு நிலம் -

துளைக்க மாட்டாக் கல்லாகக் கிடந்தாலும் துணிந்து ஆழத்துள் ஆழமாகச் சென்ற காலை உலகத்து ஊர்திகளை யெல்லாம் ஊரச் செய்வதற்குத் தக்க ஆற்றலையெல்லாம் தேக்கி வைத்துக் கொண்டுள்ள கல்லெண்ணெய் (பெட்ரோல்) சுரக்கின்றதே ஒரு நிலம்-

இவையெல்லாம் நல்ல நிலங்கள் அல்லவா!

முன்னவை நல்ல நிலங்களா? பின்னவை நல்ல நிலங்களா? நமக்குத் திகைப்பே உண்டாகின்றது இல்லையா?

சங்கச் சான்றோர்களில் ஒருவராகிய ஔவையார் காலத்திலே "எது நல்ல நிலம்?" என்னும் வினா ஒன்று பிறந்தது. அதற்குப் பலரும் பலவாறு கூறினர். மாறு பட்டும் வேறுபட்டும் மொழிந்தனர். அவர்களுக்கு உண்மையுணர்த்த விரும்பினார் ஔவையார். ஆனால் தம்தம் கருத்தே சரி என்று தருக்குக் கொண்டிருந்த அவர்களை நோக்கி உரைக்க அவர் விரும்பினார் அல்லர். வினாவுக்கு இடமாக இருந்த நிலத்தைப் பார்த்தே விடையளித்தார்.

"நிலமே! நீ ஓரிடத்தே நாடே ஆகவும், மற்றோர் இடத்தே காடே ஆகவும், இன்னோர் இடத்தே பள்ளமாகவும், வேறோர் இடத்தே மேடே ஆகவும் காணுகிறாய்! நீ தோற்றத்தில் எவ்வாறு இருப்பினும் எவ்விடத்தில் நல்லவரும் முயற்சியாளரும் உளரோ அவ்விடத்தில் நீயும் நல்லதாக உள்ளாய்! அவ்வாறு இல்லாமல் உனக்கென நல்ல தன்மை உடையை அல்லை! நீ வாழ்வாயாக" என்றார்.

வளமில்லாத தீய நிலமாகவே இருந்தாலும் நல்லவர் வாழும் நிலம் நல்லதே ஆகும். வளமிக்க நல்ல நிலமாகவே இருந்தாலும் தீயர் வாழும் நிலம் தீயதே ஆகும். நிலத்தைப் பொறுத்து இல்லை நிலத்தின் நன்மை தீமைகள், நிலத்தில் வாழ்பவரைப் பொறுத்ததே யாகும் என்பது ஔவையார் வாக்கு.

> *"நாடாகு ஒன்றோ காடாகு ஒன்றோ*
> *அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ*

*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே”*

என்பது ஔவையார் வாக்கு.

நாடு என்பது மருத நிலம் (வயல்) காடு என்பது முல்லை நிலம். அவல்(பள்ளம்) என்பது நெய்தல் (கடல்) நிலம். மிசை (மேடு) என்பது குறிஞ்சி (மலை) நிலம்.

ஒரு நாடு பசியாலும் பிணியாலும் நலிவடை கின்றது. அப்பொழுது ஒருநாடு ஓடிவந்து உதவு கின்றது. இந்த நாடும் நல்லோரும் காலத்தால் உதவிய நாட்டைக் கனிவோடு வாழ்த்துகின்றனர். வாழ்த்து நாட்டுக்கு எவ்வாறு கிடைத்தது? அந்நாட்டில் வாழ்வோர் நன்னெஞ்சத்தால்தான் அந்நாடு வாழ்த்தப் பெற்றது அல்லவா!

ஒரு நாட்டை ஒரு நாடு அணுகுண்டு போட்டுத் தவிடு பொடியாக்குகின்றது. அழிவுக்கு ஆட்பட்ட நாடேயன்றி உலகில் வாழும் நல்லோர் அனைவருமே ஒரே குரலில் அழிவு செய்த நாட்டைக் கண்டிக்கின் றனர். நாடா ஓடிவந்து குண்டு போட்டது! நஞ்சே உருவான நெஞ்சமுடையவர்கள் சிலர் செயல் அந் நாட்டில் உள்ள அனைவருக்கும், நாட்டுக்கும் கெட்ட பெயரை வழங்கியது! நாட்டு மக்கள் செயலால்தானே நாடு பெருமையும் சிறுமையும் அடைகின்றது.

இன்னும் எண்ணிப் பார்க்கலாம்: பருவம் தவறாமல் மழை பொழிகின்றது; நிலமும் வளமுடைய தாக உள்ளது. ஆனால் முயன்று பாடுபடும் ஊக்கம் மக்களுக்கு இல்லை! அந்த நிலத்தால் நாட்டுக்கு ஆகும் பயன் என்ன?

வளமற்ற மேட்டு நிலமாக உள்ளது. அறிவும் ஆற்றலும் உடைய ஒருவன் ஆழ்ந்து எண்ணுகிறான். அவ்வழியே ஓடும் ஆறு பயனின்றி ஓடிக் கடலைச் சேராமல் குறுக்கே அணைகட்டிச் செல்வம் கொழிக்கச் செய்துவிடுகிறான். முயல் திரிந்த இடம் கயல் திரியவும், கள்ளி முளைத்த இடம் கரும்பு செழிக்கவும் செய்து விடுகின்றான். நாட்டுக்கு வேண்டும் நலங்களையெல்லாம் ஒருங்கே தரத்தக்க நன்செய் நிலமாகச் செய்துவிடுகின்றான். இது நிலத்தின் மாண்பா? நிலத்து வாழ்ந்த நல்லவனும் முயற்சியாளனும் ஆகியவன் மாண்பா?

'நந்திதுர்க்கப்' பகுதியில் நாளும் உழுதுதான் பார்த்தார்கள். கலப்பையும் கொழுவும் முரிந்தனவே அல்லாமல் வளமாக முளைத்த பயிரும் இல்லை! பயனும் இல்லை! ஆனால் அதன் அடிப்பகுதியில் தங்கப்பாளம் இருப்பதை மூளை முதிர்ச்சியுடையவன் கண்டுபிடித்தான். அந்நிலம் பொன் விளையும் புகழ்நிலம் ஆயிற்று! கோலார் தங்கச் சுரங்கம் என்பது அதுதானே!

பூங்குன்றத்திற்கோ, திருவாமூர்க்கோ, மருதூர்க்கோ, துள்ளத்திற்கோ, போர்பந்தருக்கோ ஒரு தனிப்பெருமை உண்டா? பூங்குன்றத்திலே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என முழங்கிய கணியன் பூங்குன்றனாரும், திருவாமூரிலே, "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கூறித் தொண்டராக வாழ்ந்த திருநாவுக்கரசரும், மருதூரிலே, "உயிர்தான் உயிர் இரக்கம் தான் இரண்டில்லை; ஒன்றே யாம்; இரக்கம் நீங்கினால் உயிரும் நீங்கும்" என்று உருகி நின்றாரே வள்ளலார் அவரும், துள்ளத்திலே, தமிழ்த்

தென்றலாய், தொழிலாளர் தோழராய், மனிதர் என்பதற்கு வடிவாய்த் திகழ்ந்தாரே திரு. வி. கலியாண சுந்தரனார் அவரும், போர்பந்தரிலே, தம் வாழ்வையே வாய்மையின் ஆய்வுக்கூடமாக்கி உள்ளத்தால் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உறையும் அண்ணல் காந்தியாரும் பிறவாமல் இருந்தால் அந்த மண்ணுக்கென மதிப்பு உண்டா?

மண்ணுக்கெனத் தனிமதிப்பு இல்லை! மண்ணில் வாழும் மக்களுக்குரிய மதிப்பே மண்ணின் மதிப்பு! ஆதலால்,

**"எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"**

என்று ஔவையாருடன் சேர்ந்து நாமும் முழங்கலாம்.

## 6. எல்லாரும் உவப்பது

*காட்டுவழியே ஒருவன் செல்கிறான். அவன் கையில் வைத்திருக்கும் பணத்தைக் கவர்ந்து கொள் கிறான் ஒருவன். கவர்ந்தவன், தான் நினைத்தது நிறை வேறியது என்று மகிழ்வான்! ஆனால் கைப்பொருளைப் பறிகொடுத்தவன் களிப்படைவானா?*

*சூதாட்டத்திலே ஈடுபட்டுப் பலர் பணத்தையும் பறித்துக் கொள்கிறான் ஒருவன்; அவனுக்குப் பணம் பறித்துக்கொண்ட மகிழ்ச்சி இருக்கலாம்; ஆனால் பறிகொடுத்த பலருக்கும் மகிழ்வு இருக்க முடியுமா?*

*மதுவைப் பருகி மயங்கிய நடையில் வீட்டுக்கு வருவதிலே மகிழலாம் ஒருவன். ஆனால், அவன் திட்டுக்கும் அடிக்கும் ஆட்படும் மனைவியும் மக்களும் அவன் மதுவைப் பருகியதற்கு மகிழ முடியுமா?*

*உயிரன்பர் இருவரை ஏறுமாறாக ஏதாவது சொல்லி வைத்துப் பகைவர் ஆக்கி இன்புறலாம் ஒருவன். ஆனால், அன்பர் பகைவராக மாறிச் சண்டை யிட்டு மண்டையை உடைத்துக்கொண்டு அல்லல் படுவதில் உவகை கொள்வரா?*

*ஒருபக்கத்தில் உண்டாகும் உவகை மறுபக்கத்தில் இல்லையே ஏன்? உவகை இல்லாது ஒழியினும் அல்லல் ஆவது இல்லாமல் இருக்கக்கூடாதா? அந்த அளவிலாவது அமைதி உண்டாகுமே!*

தனக்கு மட்டும் உள்ள உணவைப் பலநாள் பட்டினியாக இருக்கும் ஒருவனுக்குப் பரிவுடன் வழங்கி, அவன் உண்டு மகிழ்வதைப் பார்த்து மகிழும் நல்லோர் இல்லையா!

தான் வாடையில் நடுங்கித் துயருற்றாலும் தாங்கிக் கொண்டு, வாடைக்கு ஆற்றாத ஒருவனுக்குத் தன் ஆடையை வழங்கி அவன் நடுக்கம் ஒழிவதைக் கண்டு நல்லின்பம் கொள்பவர் இல்லையா?

தன் தலைவனைக் குறித்துவரும் வேலைத் தான் தாங்கிக்கொண்டு அவனுக்காகத் தன் உயிரையே உதவி, உவகை அடையும் வீரனும், அவன் அன்பை நினைந்து நினைந்து உருகி உருகி உவகைக் கண்ணீர் வடிக்கும் தலைவனும் இல்லையா?

படை எடுத்து வந்த பகைவரை அழித்து அளப்பரிய மகிழ்வோடு நாட்டுக்கே தன் உயிரை ஈந்து மகிழும் வீரனும், வீட்டுக்கு ஒரு மகனாக வாய்த்தாலும் நாட்டுக்கு ஒரு மகனாக நற்பணி செய்த அம்மகனைத் தன் வயிற்றிலே தாங்கிய பெருமையை எண்ணி எண்ணிப் பெருமிதம் அடையும் தாயும் இல்லையா?

இவ்வின்பம் கொண்டோர்க்கும் கொடுத் தோர்க்கும் ஒருங்கே கிடைக்கும் உவகை இல்லையா! இத்தகைய உவகையை விரும்பார் எவர்? வெறுப்பாரும் தாம் எவர்?

**கடியலூர் உருத்திரங் கண்ணனார்** 301 அடிகளில் பாடிய "பட்டினப் பாலை" யைக் கேட்டுப் பதினாறு நூறாயிரம் பொன் தந்த **கரிகாலனைப்** போல் கொடை வழங்க முடியாமல் போகலாம்.

தன்னைப் பத்துப்பாடல் பாடிய **கபிலருக்குச்** சிறுகொடையாக நூறாயிரம் பொன்னும், நன்றா

என்னும் மலையின் மேல் ஏறி நின்று கண்ணுக்குத் தெரியும் காடு நாடுகளையும் பரிசாக வழங்கிய செல்வக் கடுங்கோ வாழியாதனைப் போல் வழங்க முடியாமல் போகலாம்.

> *"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு*
> *போகவோ நாங்கள் - சாகவோ?*
> *அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள்*
> *அல்லமோ? உயிர் வெல்லமோ?*

என்று துணிந்து அயலார்க்கு எதிராகக் கப்பல் ஓட்டிய வ.உ. சிதம்பரனாரைப் போன்ற வீரம் இல்லாமல் போகலாம்.

> *"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்*
> *விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"*

என்னும் ஊற்றத்தில் அழுந்தி, ஊர்தோறும் அலைந்து அல்லலுற்று ஏடுகளைத் தொகுத்து எழிலுற அச்சிட்டு அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றிய அறிஞர் உ.வே. சாமிநாத ஐயரைப் போல அருந்தொண்டாற்ற முடியாமல் இருக்கலாம்.

கேடு செய்யாமலாவது இருக்கலாமே! புகழ முடியா விட்டாலும் பழிக்காமலாவது இருக்கலாமே! பின்பற்றுவதற்கு முடியாவிட்டாலும், பின்பற்று வாரைத் தடுக்காமலாவது இருக்கலாமே!

அறியாப் பருவத்தில் அடங்காமல் தவறு செய்பவர் உளர். அவர் அறியும் நிலை அடைந்தால் தாம் செய்த தவற்றுக்கு வருந்துவர்; திருந்தவும் செய்வர். ஆனால், அறிந்துகொண்டே தவறு செய்பவர் வருந்தவும் செய்யார்; திருந்தவும் செய்யார்; நல்லவர்

உள்ளம் வருந்துமாறே நாளும் கேடு செய்து திரிவர்! பழியும் பாவமும் ஏற்று ஒழிவர்.

சங்கச் சான்றோருள் ஒருவர் நரிவெரூஉத் தலையார். அவரைச் சூழவும் பல முதியவர் இருந்தனர். வயதால் முதிர்ந்தவர்களே அல்லாமல் செல்லும் வழியால் முதிர்ந்தவர்கள் அல்லர். ஆதலால் அவர்கள் வயதையும், வயதுக்குப் பொருந்தாச் செயலையும் எண்ணி வருந்திய நரிவெரூஉத்தலையார், அவர்கள் நல்லறிவு பெறுமாறு இடித்து உரைத்தார்.

"பெரியவர்களே! பெரியவர்களே! கெண்டை மீனின் முள்ளைப் போன்ற நரையும் ,சுருக்கம் விழுந்த கன்னமும் உடையவராகப் பயன் எதுவும் இல்லாமல் முதுமையடைந்துள்ள பெரியவர்களே! உங்கள் செயலை எண்ணி இப்பொழுதும் வருந்தமாட்டீர்கள் போலும்! இயமன் வந்து உயிரைக் கவர்ந்துகொண்டு போகும்போது தான் உங்கள் செயலை எண்ணி வருந்துவீர் போலும்! உங்கள் தன்மையை நினைந்து யான் மிகவும் வருந்துகின்றேன். நன்றாகக் கேளுங்கள்!

"நீங்கள் நல்ல செயல்களைச் செய்யமாட்டீர்கள். ஆயினும் தீயசெயல்களையாவது செய்யாது இருங்கள். அவ்வாறு இருப்பதே யாவரும் புகழ்வதற்கு உரியதாகும். அது மட்டும் அன்று. உங்களை நல்ல வழியிலே செலுத்திக் காத்துக் கொள்ளத்தக்க வகையும் அதுவேயாகும்" என்றார்.

*"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"*

என்பது நரிவெரூஉத்தலையார் வாக்கு.

நரிவெரூஉத்தலையார், எல்லாரும் நல்லதே செய்ய விரும்புகிறார். அவ் விருப்பம் எல்லாருக்கும் வேண்டுமே! நல்லது செய்ய மாட்டாதவர்களும் விரும்பாதவர்களும் இருக்கக் காண்கிறார். அவர்களுக்கு அறிவு வருமாறு: "நல்லது செய்ய முடியாவிட்டாலும் கேடாவது செய்யாதிருங்கள்; அதுபோதும்" என்கிறார். அதையாவது ஏற்கலாம் அல்லவா!

மரத்தில் ஏறுபவனுக்குக் காலைத் தாங்கிவிட்டால் எளிதாக ஏறுவான். காலைத் தாங்க விருப்பமில்லை என்றால் ஒதுங்கியாவது நிற்கலாம். ஆனால், முயன்று ஏறுபவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கீழே இழுத்தால் எப்படி? "உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்கலாமே" என்பது பழமொழி அல்லவா!

குதிரை குலுக்கிவிட்டதால், இடறி விழுந்தவனுக்கு, ஏதாவது உதவி செய்தல் கடமை. அதனைச் செய்யாவிடினும் இடறி விழுந்தவன் மேலே ஏறி உதைக்காமலாவது இருக்கக்கூடாதா?

கல்தட்டி விழுந்து பல்லை உடைத்துக் கொண்டவனைப் பார்த்துப் பரிவுகாட்ட முடியாவிட்டாலும் கைகொட்டி நகைக்காமலாவது இருக்கலாமே!

இவ்வெண்ணங்களால் தான் நரிவெரூஉத் தலையார்,

> **"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
> **அல்லது செய்தல் ஓம்புமின்"**

என்றார். இதனை எவர்தாம் வரவேற்கமாட்டார்? எல்லாரும் உவப்பது இதுவேயாம்.

# 7. வெளிப்படக் கூறுக!

ஓர் உதவியை வேண்டி ஒருவர் ஒருவரிடம் வரு கிறார். தம்மால் செய்ய முடியும் உதவியாயின் உடனே செய்து விடுவது நன்மை தரும். அவ்வுதவி தம்மால் செய்யக் கூடாதது ஆயினும் தம் முடியாமையை உடனே தெரிவித்து விடுவதும் நன்மையே ஆகும்.

ஆனால், சிலர் அவ்வாறு செய்வது இல்லை. தம்மால் முடியக்கூடிய உதவியையும், 'இன்று' 'நாளை' என்று கடத்திக்கொண்டே செல்வர். பல நாள்கள் தேடிவர வைத்து, இனி, இவரைத் தப்ப முடியாது என்னும் இக்கட்டான நிலையில் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அனுப்புவர். இது முறை கெட்ட செயலாகும்.

உடனே, தாம் செய்தற்கு உரிய உதவியைச் செய்திருந்தால் காலத்தால் உதவிய பெருமையும், அவ்வுதவியைப் பெற்றவருக்குப் பெருநன்மையும் ஏற்பட்டிருக்கும். இல்லை என்று சொல்லி விடுத் திருந்தாலும் அவரை விடுத்து வேறொருவர் வழியாக நினைத்ததை முடித்துக் கொள்ளவோ, தன் முயற்சி யாலே முடித்துக் கொள்ளவோ முயன்றிருக்க வாய்ப் பாக இருந்திருக்கும். அவ்வாறு இன்றி அவரை நம்பச் செய்து - கிடைக்குமென்றே உறுதி கொள்ளச் செய்து இறுதியில் முடியாது என்று கூறுவது தாங்கிக் கொள்ள முடியாத துயரையும் எதிர்பாராத ஏமாற்றத்தையும்

தரும். ‘ இலவு காத்த கிளி போல’ என்னும் பழமொழிக்கு ஒப்பானது ஆகும் இவர் நிலை.

வீடு தீப்பற்றிக் கொண்டது என்று ஒருவன் ஓடிவந்து சொன்னால் அவனோடு ஓடிப்போய் தீயினை அணைக்கவேண்டும். அல்லது “ஓடிப்போய் அணை; நான் விரைவில் வருகிறேன்” என்று கூறியாவது விடுக்க வேண்டும். அதனை விடுத்து, “ஐயோ! உன் வீடா தீப் பற்றிக் கொண்டது” என்று கூறிக் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழும் அவனைப் போகவிடாமல் செய்தால், அது வீட்டை எரியாமல் காக்க வேண்டும் என்னும் எண்ணம் உடையவன் செய்யும் செயல் அன்று; குறையில்லாமல் எரிந்தே போக வேண்டும் என்னும் எண்ணமுடைய கொடியவன் செய்யும் வஞ்சகச் செயலே ஆகும். அச்செயலைப் போன்றதே இதுவும் ஆகும்.

தம் இயல்புக்குப் பொருந்தாத, நேர்மைக்கு மாறுபட்ட உதவியை ஒருவன் கேட்டு வந்தான்என்றால் கூட அவனிடம் அப்பொழுதே, “என்னிடம் இருந்து இவ்வுதவியை எதிர்பார்க்காதே! என் இயல்புக்கு இஃது ஒத்து வாராது! நீ நினைப்பது முறை கெட்ட செயல்!” என்று கூறினால் அவரை மீண்டும் இவ்வழிக்கு எதிர் நோக்க மாட்டான். அவரைப் பற்றிக் காலங் கடந்தாவது நல்லெண்ணம் கொள்வான். ஒரு வேளை தான் செய்வது தவறு என்று கூட உணர்ந்து திருந்தினாலும் திருந்துவான். அவ்வாறு செய்யாமல் அலைக்கழிப்பது அறிவொடு கூடிய செயலாகாது.

இப்பொழுது தம்மால் முடியாச் செயலையெல்லாம் முடியும் என்று கூறுபவரும், தம்மால்

முடியும் செயலையும் முடியாது என்று கூறுபவரும் பெருகியுள்ளனர். இந்நிலை நாட்டையே அலைக் கழிக்கும் நோய்போலப் பெருகிவிட்டது. அதனால் நல்லவர்களும் ஏமாளிகளும் நலிவு கொள்கின்றனர். தீயவர்களும் எத்தர்களும் பொலிவுடன் உலா வருகின்றனர். இத்தகைய உண்மைக்குப் புறம்பான எடுத்துக்காட்டு, எதிர்க்கால மக்களை எங்கே கொண்டு போய்விடும்?

நாடி பார்த்து மருந்து தருவது நாட்டு மருத்துவர் வழக்கம். நாடிகள் வாதம், பித்தம், சிலேத்துமம் என மூவகையாம். வாதநாடி அடங்கினால் ஒரு நாளிலும், சிலேத்தும நாடி அடங்கினால் ஒரு நாழிகையிலும், பித்த நாடி அடங்கினால் ஒரு நிமிடத்திலும் உயிர் நீங்கும் என்பர். இம் மூன்று நாடிகளிலும் 'நாளை' என்னும் வாத நாடியினும், 'நாழிகை' என்னும் சிலேத்தும நாடியினும், 'இப்பொழுது' என்னும் பித்தநாடியே இன்பமானது என்று தமிழ்ப் பாட்டி ஔவையார் ஒரு தனிப்பாடலில் கூறியுள்ளார். சாவிலேயே 'இழுபறி' இருத்தல் கூடாது என்றால், வாழ்விலே 'இழுபறி' வேண்டுமா? அவ் விழுபறி செய்வது வாழும்போதே சாகடிப்பது அல்லவா?

'பாண்டியன் நன்மாறன் என ஒருவன் இருந்தான். அவனை ஆவூர் மூலங்கிழார் என்னும் சங்கச் சான்றோர் கண்டார். அவனிடம் தன் குடும்ப நிலைமையை எடுத்துரைத்தார்; தக்க பரிசில் வழங்க வேண்டும் என வேண்டினார். அவனும் மறுத்துரைத்தான் அல்லன். உடனே வழங்கினானும் அல்லன்; ஒருநாள், இருநாள் என்று பலநாள் எதிர்பார்த்து இருந்தார் புலவர். நன்மாறன் பரிசில் வழங்காமல் நாளைக் கடத்திக்

கொண்டே சென்றான். புலவரால் மேலும் அங்கே காத்துக் கொண்டிருக்க முடியவில்லை. 'தரமுடியாது' என்று கூறவும் வேந்தனுக்குத் துணிவு வரவில்லை! இந்த இக்கட்டான நிலையில் புலவர் உள்ளம் எரி நெருப்பாக வெதும்பியது. அவ்வெதுப்பும் ஒரு பாடலாக வெளிப்பட்டது.

**"கொடுக்க முடிந்த பொருளை முடியும் என்று சொல்லிக் கொடுப்பதும், தம்மால் கொடுக்க முடியாப் பொருளை முடியாது என்று சொல்லி மறுப்பதும் ஆகியவை முயற்சியாளரால் போற்றிக் கொள்ளக் கூடிய செயல்களேயாம்.**

"ஆனால், **தன்னால் முடியாததனை முடியும் என்பதும், முடிவதனை முடியாது என்று மறுப் பதும் ஆகிய இரண்டும் உதவி கேட்டு வந்தவர்க்கு அல்லலையும், கொடுப்பவர்க்குப் பழியையும் தரும்."** உன் செயல் என்னளவில் இப்பொழுது அவ்வாறே அமைந்தது!

"நீ செய்ததைப் போல வேறொருவர் செய்ததை நான் இதுவரை கண்டது இல்லை; இதனால் உன் குடிக்குக் கேடு நேராது இருக்குமாக! நின்மக்கள் நலமாக வாழ்வார்களாக! நான் இங்குக் காத்திரேன். வெயில் என்று பார்த்து வெறுப்படையேன்; பனி யென்று பார்த்துச் சோர்வடையேன்; வறுமையே குடி கொண்ட என் வீட்டில் நாணத்தையே பொருளாகக் கொண்டு என்னை எதிர்நோக்கியிருக்கும் என் அன்பு மனையாளை நோக்கிச் செல்கின்றேன்! நீ நெடிது வாழ்வாயாக!" என்றார். புறப்பட்டுச் சென்றார்.

புலவர் தாம் அடைந்த ஏமாற்றத்தை மறைக் காமல் வெளிப்படுத்தினார். அவனை வழிப்படுத்திப்

பொருள் பெறவேண்டும் என்பது அவர் எண்ணம் இல்லை. அவன் செய்த தவற்றை இடித்துக் காட்ட வேண்டும். அதனால் அவன் திருந்தி வாழவேண்டும். மேலும் இத்தவற்றை அவன் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தினால் கூறினார்.

"யான் பெற்ற இன்பம் இவ்வுலகும் பெறுக" என்பது சான்றோர் விருப்புரை. அதுபோல், "யான் பெற்ற துன்பம் இவ்வுலகு பெறாதொழிக" என்பதும் அவர்கள் நினைவாகும். அந்நினைவின் வெளிப்பாடே ஆவூர் மூலங்கிழார் பாட்டாகும். அவர் கூறுகிறார்.

> ***"ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்***
> ***ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்***
> ***ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே"***

"செய்யத்தக்கது இது" என்று கூறிய அளவில் நிற்காமல், " செய்யத் தகாதது இது" என்றும் வலியுறுத்த வேண்டும் என்று எண்ணினார். அதனால்,

> ***"ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது***
> ***இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே***
> ***இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்***
> ***புகழ்குறை படூஉம் வாயில்"***

என்றார். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. அதனால் வேலை வாங்கித் தருவோம் என்னும் இடைத் தரகர் கூட்டம் பெருகி வருகின்றது. முடியாததையும் முடியும் என்று கூறி முடிந்த அளவும் பணத்தைச் சுருட்டிக் கொண்டு 'முழு ஏப்பம்' விடுகின்றது. அக் கூட்டம், பசப்புரைக்கு ஆட்பட்டுப் பணத்தைத் தந்தவர் நடைபிணமாக நடுத்தெருவில் உலாவும் நிலைமை ஏற்படுகின்றது! இது, நாள்

இதழுக்குச் செல்வாக்கு உண்டாக்கும் செய்தியாகி விட்டது இப்பொழுது!

ஓர் அலுவலர், தாமே செய்ய வேண்டிய செயலாக இருக்கும்; எளிதான செயலாகவும் இருக்கும்; ஆயினும் அதனை உரிய காலத்தில் முடித்துக் கொடுப்பது இல்லை. தள்ளிப் போட்டுக் கொண்டும், தகுதியில்லாத காரணம் காட்டித் தள்ளுபடி செய்து கொண்டும் வருவர். எதற்காக அவ்வாறு செய்கிறார்? தம்மால் முடிவதை ஏன் தள்ளிப் போடுகிறார்? கையூட்டுப் பணத்தை (இலஞ்சத்தை) எதிர்பார்க்கிறார். அது கைக்கு வந்து விட்டால் உடனே முடித்துத் தருகிறார். கையூட்டு வந்து விட்டால் முறை கேடான செயலையும் முனைந்து செய்து முடிக்கின்றனர்! நாடறிந்த செய்தி இது! நாட்டைப் பிடித்த கேடு அல்லவா இது!

ஆவூர் மூலங்கிழார் ஈராயிரம் ஆண்டுகளின் முன்னே வலியுறுத்தினார். தம் பட்டறிவில் கண்டதை மறைக்காமல் உரைத்தார். அதனை இலக்கியம் என்று கருதினோம்! வாழ்வுநெறி என்று கொள்ளவில்லை. அதனால் நாட்டுக்குப் பல கேடுகள் சூழ்ந்தன. இன்றைக்காவது,

> **"ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்**
> **ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்**
> **ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே"**

என்பதை உணர்ந்து கடைப்பிடித்து வாழவேண்டும்?

## 8. வாழ்வின் வெற்றி

ஒருவர் வாழ்வின் வெற்றி பணம் தொகுப்பதிலே இல்லை; பதவி ஏற்பதிலே இல்லை. பட்டங்களும் பாராட்டுகளும் பெறுவதிலேயும் இல்லை; அவர் மனத்தின் நிறைவிலேயே அடங்கியிருக்கிறது.

பணத்திலோ, பதவியிலோ அடங்கி வாழ்வின் வெற்றி அமைந்திருந்தால் **புத்தர் பெருமான்** அவற்றைத் துறந்து துறவியாகி இருக்க மாட்டார். **அசோகர்** போரெழிப்புக் கொள்கையைப் போற்றி இருக்க மாட்டார். **நேரு பெருமகனார்** ஏறத்தாழ நாலாயிரம் நாள்களைச் சிறைச்சாலைக் கண்ணே கிடந்து கழித்திருக்க மாட்டார்!

சாவும்போதும் சல்லிக்காசையும் விட்டொழிக்க மனமில்லாமல் - இரும்புப்பெட்டிச் சாவியையும் தர மனமில்லாமல் - சிக்கெனப் பிடித்துக் கொண்டு இருப்பவர்களையும் காண்கிறோம். வாழ வேண்டிய பொழுதிலே வலியவந்த பணத்தையும் ஆற்றங்கரை யிலே, கிணற்று மேட்டிலே, சாலை வழியிலே வீசி எறிந்து புகழும் வேண்டாப் புகழாளராக விளங்கிய வள்ளலார் இராமலிங்க அடிகளாரையும் காண்கி றோம்! எந்த மனம் நிறைந்த மனம்? எந்த மனம் வெற்றி மனம்?

கோடியைத் தேடிவைத்தும் கொஞ்சமும் மனநிறைவு இன்றிக் கோயில் பணத்தையும் கொள்ளை

அடிப்பவரையும், கள்ள நோட்டு அச்சடிப்பவரையும், செம்பைத் தங்கமாக்கும் "இரசவாதச்" செயலிலே ஈடுபடுபவரையும் காண்கிறோம். இருக்கும் இடம் தேடி வந்து என் பசிக்கு எடுத்து இடுவோர் உண்டு என்றால் உண்டிடுவேன் என்று கூறும் பட்டினத்தார் போன்றவர்களையும் காண்கிறோம்! எவர் மனம் நிறைந்த மனம்? எவர் மனம் வெற்றி மனம்?

"என் வாழ்க்கை பொருட்செல்வம் பெற்றதா? ... யான் பிறந்து வளர வளர என் தந்தையார் வைத்திருந்த சில நிலபுலங்களும் ஈட்டிய சிறுபொருளும் படிப் படியே கரைந்தன. என் வாழ்க்கை பொருட்செல்வம் பெற்றதா? இல்லை! . . .

மனைவி மக்கள் ஒரு பெருஞ்செல்வம். அச் செல்வமாதல் என் வாழ்க்கையில் நிலைத்ததா? இல்லையே. யான் சொந்த நிலையமும் இல்லாதவன்.

"வாழ்க்கைக்கு ஏதேனும் ஒரு செல்வம் தேவை. எச் செல்வமும் பெறாத வாழ்க்கை வாழ்க்கையாகாது. என் வாழ்க்கை ஏதேனும் செல்வம் பெற்றதா? என் வாழ்க்கை ஒருவகைச் செல்வம் பெற்றது. அது தொண்டுச் செல்வம்.

"என் மாட்டுப் பொருட்செல்வம் குவிந்திருந்தால் என் வாழ்க்கை தொண்டுச் செல்வத்தை அடைந்து இருக்குமோ? என்னமோ? தெரியவில்லை. என்பால் தொண்டுச் செல்வம் பெருகுமாறும் பொருட்செல்வம் பெருகாதவாறும் அருள்சுரந்த இயற்கை இறையை வாழ்த்தல் வேண்டாமா? அது வாழ்க!" என்று தமிழ்த் தென்றல் திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பின் நிறை வுரையிலே கூறுகின்றார். ஆன்று அவிந்து அடங்கிய

கொள்கைச் சான்றோராகிய அப் பெருமகனார் உரை, வெற்றி வாழ்வின் விழுமிய உரையன்றோ! அவரே வெற்றி தோல்வியை ஆய்கிறார்!

“வாழ்க்கையில் வெற்றியும் பேசப்படுகிறது; தோல்வியும் பேசப்படுகிறது. வெற்றி வாழ்க்கை எது? தோல்வி வாழ்க்கை எது?”

“பதவி பொருள் முதலியவற்றில் படிப்படியே இவர்ந்தோர் (உயர்ந்தோர்) வாழ்க்கை வெற்றி உடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோல்வி உடையதென்றும் பொதுவாகக் கருதப்படுகின்றன. வாழ்க்கையின் வெற்றி பதவி பொருள் முதலியவற்றால் விளைவது உண்மையாயின் என்னுடைய வாழ்க்கை முழுத்தோல்வியுடையதென்று தயங்காது சொல்வேன். வாழ்க்கையில் வெற்றி என்பதும் தோல்வி என்பதும் எனக்கு வேறுவகையாகத் தோன்றுகின்றன. மக்கட் பிறவியில் பகுத்தறிவு இருத்தலும், அது படிப்படியே விளக்கமுறும் பண்பு அதன்பால் இருத்தலும் நன்கு தெரிகின்றன. இவ்வளர்ச்சிக்கென்று வாழ்க்கை அமைகிறது. இத்தகைய வாழ்க்கையின் பேறு, பதவி பொருள் அளவில் நிற்பதாகுமா? என்று ஐயுறுகிறேன். எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து எவ்வுயிரும் பொது என்னும் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிரும் என்னும் உணர்வு பொங்கித் தொண்டு செய்யும் அன்புச்செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ அவர் வாழ்க்கை வெற்றி உடையதென்றும், மற்றவர் வாழ்க்கை தோல்வியுடைய தென்றும் எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவம் முதலிய எனக்கு உணர்த்துகின்றன.”

இது வாழ்க்கைக் குறிப்பின் தோற்றுவாயில் திரு.வி.க. குறிப்பு. இதனால் வாழ்க்கைக் குறிப்பின் எழுவாய் முதல் இறுவாய்வரை. 'வாழ்வின் வெற்றி' வரலாறே கூறுப்பெறுகிறது என்க. வெற்றி வாழ்வின் அடித்தளத்தைச் சங்கச் சான்றோருள் ஒருவராகிய பிசிராந்தையார் விரித்துரைத்தார். அச் செய்தி வருமாறு:

சிலர் இளமையிலேயே முதியவர்போலத் தோன்றுகின்றனர். சிலர் முதுமையிலும் இளைய வராகத் தோற்றம் அளிக்கின்றனர். பிசிராந்தையார் முதுமை அடைந்தும் இளமைப் பொலிவுடன் விளங்கி யவர் ஆவர்.

பிசிராந்தையார் பாண்டிய நாட்டினராயினும் சோழ நாட்டிலும் அவர் பெயர் பரவியிருந்தது. அவரைப் பற்றிக் கேள்விப்பட்டவர் பலர் இருந்தனர். ஒருநாள் அவர் சோழ நாட்டுத் தலைநகரம் உறை யூருக்குச் சென்றார். அவரைக் கண்டதும் அவரைப் பற்றி நெடுங்காலமாகக் கேட்டிருந்த பெரியவர்களுக்கு வியப்பாக இருந்தது. அதனால், "பெரியீர்! நும்மைப் பற்றி நெடுங்காலமாகக் கேள்விப்பட்டு வருகின்றோம். ஆயினும் நும்மிடம் முதுமையோ முதுமைக்கு அடையாளமாம் நரையோ தெரியவில்லை! அதன் காரணம் என்ன?" என்றனர்.

அவ் வினாவினை ஏற்றுக்கொண்ட பிசி ராந்தையார், தாம் இளமையாக இருப்பதற்குரிய காரணத்தை விளக்கினார்.

"குடும்பத்தின் அமைதி மனைவியைப் பொறுத் ததே ஆகும். மனைவியிடம் குடும்பத்திற்குத்தக்க

பெருமையான குணங்கள் எல்லாம் அமைந்து இருக்க வேண்டும். அவ்வாறு அமையப்பெற்றவள் என் மனைவி.

“மனைவி நல்லியல்பு உடையவளாக இருந்து, மக்கள் அறிவிலாராகவும் அடங்காதவராகவும் இருந்தால் குடும்பம் சிறக்குமா? என் மக்கள் அறியவேண்டியவற்றை நிரம்ப அறிந்து அமைதியும் அடக்கமும் உடையவராக விளங்குகின்றனர்.

“இனி, என் உடன் பிறந்தோர் ஆகிய இளையவர்களும் உள்ளனர். பல இடங்களில் உடன் பிறந்தார்களுக்குள் உண்டாகும் தகராறுகளே குடும்பத்தை உருக்குலைக்கின்றன; அழிவழக்குகளிலும் அடிதடிகளிலும் ஆட்பட்டு அல்லலுக்கு உறைவிடமாகின்றன. ஆனால், என் இளையவர்களோ வேலையாள்களோ யான் என்ன நினைக்கிறேன் என்பதை யான் சொல்லாமல் தாங்கள் உணர்ந்து அதற்கு ஏற்றபடி கடமை செய்பவர்களாக இருக்கின்றனர். ஆதலால் நிரம்பிய மன அமைதி உண்டாகின்றது.

‘வீட்டுத்தலைவன் தன் குடும்பத்தை எவ்வாறு கண்ணுங் கருத்துமாகக் காப்பானோ அவ்வாறே வேந்தனும் நாட்டுக்குச் செய்யத்தக்க நன்மைகளை எல்லாம் எண்ணி எண்ணிக் குறைவில்லாமல் செய்து குடிகளைக் காக்கின்றான்! இன்னும், குடும்பங்களில் அமைதியைக் காணும் நான், எங்கள் ஊரிலே இருக்கும் சான்றோர்களின் கூட்டுறவும் வாய்த்தவனாக உள்ளேன். அச்சான்றோர்கள் அறிவால் நிரம்பியவர்கள்; பணிவும் அடக்கமும் உடையவர்கள்; சிறந்த கொள்கை வழி நிற்பவர்கள்! ஆதலால் வீட்டிலும்,

ஊரிலும் நாட்டிலும் காணப்பெறும் அமைதியால் என் நெஞ்சம் நிறைந்து என்றும் மாறா இளமையுடைய வனாக இருக்கின்றேன்” என்றார்.

பிசிராந்தையார் தம்மை வினவிய பெரியோர்க்கு ஒரு பாடலாகவே விடையளித்தார். அதனால் காற்றோடு கலந்துவிடாமல் இன்றும் கருத்துக் குவிய லாகக் காட்சி வழங்குகின்றது.

***“யாண்டுபல வாக நரையில வாகுதல்***
***யாங்கா கியர்”***

என வினவுதிர் ஆயின்

***“மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;***
***யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்***
***அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை***
***ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்***
***சான்றோர் பலர்யான் வாழும் ஊரே”***

என்பது பிசிராந்தையார் பாடிய பாடல்.

வீட்டிலே காணாத அமைதியும் நிறைவும் நாட்டிலே காண முடியுமா? வீட்டிலே விளங்காத வெற்றி நாட்டிலே எப்படி விளங்க முடியும்? வீட்டு வெற்றியும் நாட்டு வெற்றியும் நெஞ்சத்தின் வெற்றியே என்பதைச் சான்றோர் வரலாறுகள் உணர்த்துகின்றன! உணர்ந்த வாழ்வு வெற்றி வாழ்வேயாம்!

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | கட்டுரைப் பயிற்சி | 50.00 |
| 2 | விளையும் பயிர்கள் | 45.00 |
| 3 | பழந்தமிழரங்குகள் | 55.00 |
| 4 | பொய்யா மொழி புகழ்முகம் | 50.00 |
| 5 | பூங்குன்றன் | 65.00 |
| 6 | புகழுக்குப் புகழ் | 45.00 |
| 7 | ஒப்பிலா உயர் வீரர்கள் | 45.00 |
| 8 | பெரும் புலவர் மூவர் | 55.00 |
| 9 | எது? எது? எது? | 30.00 |
| 10 | எவன் தொண்டன்? | 45.00 |
| 11 | கல்விச் செல்வம் | 35.00 |
| 12 | சுவையான சொலவடைகள் | 35.00 |
| 13 | அல்லல் இல்லை | 75.00 |
| 14 | தமிழின் தனிப் பெரும் சிறப்புகள் | 55.00 |
| 15 | இலக்கியச் செல்வர் இருவர் | 40.00 |
| 16 | தனிப்பாடல் கனிச்சுவை | 45.00 |
| 17 | திருவள்ளுவர் கண்ட சமயப் புரட்சி | 40.00 |
| 18 | உலகளாவிய உயர் குறள் | 40.00 |
| 19 | அடைநல நாடு | 40.00 |
| 20 | தந்தைக்கு விண்ணப்பம் | 50.00 |
| 21 | கீழ்நாற்பது மூலமும் உரையும் | 50.00 |
| 22 | மேல்நாற்பது மூலமும் உரையும் | 55.00 |
| 23 | வாழும் தாயுமானவர் (குறும்பாவியம்) | 65.00 |
| 24 | வாழும் தாயுமானவர் (உரைநடை) | 30.00 |
| 25 | தமிழ் உலா | 60.00 |
| 26 | வள்ளுவர் வழி | 30.00 |
| 27 | உலகளந்தார் | 60.00 |
| 28 | வியர்வை | 30.00 |

| | | |
|---|---|---|
| 29 | கலித்தொகையில் அறநெறி | 30.00 |
| 30 | பொதுமக்கள் பேச்சில் பொய்யா மொழி | 30.00 |
| 31 | தமிழியக் காவலர் திருவள்ளுவர் | 45.00 |
| 32 | பாவாணர் ஆய்வும் அகழ்வு ஆய்வும் | 60.00 |
| 33 | கால ஆராய்ச்சியும் வையாபுயாரும் | 45.00 |
| 34 | இக்குறளுக்கு ஏன் இப்பொருள் | 65.00 |
| 35 | மலர்ந்த வாழ்வு (கதைகள்) | 40.00 |
| 36 | அடிபட்ட கன்னம் (கதைகள்) | 40.00 |
| 37 | நிறைமனம் | 40.00 |
| 38 | தேனருவி | 45.00 |
| 39 | உலகை மாற்றுவோம் | 55.00 |
| 40 | திருக்குறள் விடுதூது | 40.00 |
| 41 | எங்கள் மொழி | 35.00 |
| 42 | இயற்கை இன்பம் | 40.00 |
| 43 | தமிழர் வாழ்வில் உயிர்ச் சூழல் | 40.00 |
| 44 | இருசொல் அழகு | 30.00 |
| 45 | திருக்குறளில் ஊழ் | 55.00 |
| 46 | ஊருக்கு ஒருவர் | 50.00 |
| 47 | மங்கள மனையறம் | 40.00 |
| 48 | தமிழ் நூறு மூலமும் உரையும் | 55.00 |
| 49 | வெற்றியின் மூலம் | 35.00 |
| 50 | தொல்காப்பிய மரபியல் ஆராய்ச்சி | 65.00 |
| 51 | ஆத்திச்சூடி மூலமும்அகல்விளக்கு உரையும் | 55.00 |
| 52 | பெருங்கதை | 30.00 |
| 53 | புதுநெறி காட்டிய புகழாளர்கள் | 45.00 |
| 54 | பிழையில்லாமல் எழுதுவோம் | 40.00 |
| 55 | இனிக்கும் இலக்கணம் | 55.00 |
| 56 | நிறுத்தற் குறிகளும் பயிற்சியும் | 30.00 |
| 57 | தம்பி கேள் | 50.00 |
| 58 | தமிழ்நெறிக் கரணங்கள் | 65.00 |
| 59 | தமிழில் அறிவியல் | 40.00 |
| 60 | மொழி ஞாயிறு | 35.00 |
| 61 | எளிதாகப் பாடலாம் | 50.00 |
| 62 | திருக்குறள் (கையடக்கப் பதிப்பு) | 25.00 |
| 63 | திருக்குறள் வாழ்வியல் உரை | 105.00 |

| | | |
|---|---|---|
| 64 | வட்டார வழக்குச் சொல் அகராதி | 160.00 |
| 65 | தமிழர் வாழ்வியல் இலக்கணம் | 175.00 |
| 66. | தேவநேயம் 1 | 190.00 |
| 67. | தேவநேயம் 2 | 195.00 |
| 68. | தேவநேயம் 3 | 195.00 |
| 69. | தேவநேயம் 4 | 195.00 |
| 70. | தேவநேயம் 5 | 195.00 |
| 71. | தேவநேயம் 6 | 195.00 |
| 72. | தேவநேயம் 7 | 195.00 |
| 73. | தேவநேயம் 8 | 195.00 |
| 74. | தேவநேயம் 9 | 195.00 |
| 75. | தேவநேயம் 10 | 195.00 |
| 76. | தேவநேயம் 11 | 195.00 |
| 77. | தேவநேயம் 12 | 195.00 |
| 78. | தேவநேயம் 13 | 160.00 |
| 79. | Devaneyam 14 | 285.00 |

## திருக்குறள்

சிறப்பீனும் செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு?

அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

செயற்பால தோரும் அறனே; ஒருவற்
குயற்பால தோரும் பழி.

பூவிழி பதிப்பகம்
7/2 செம்படத் தெரு
சைதாப்பேட்டை மேற்கு
சென்னை – 600 015